வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P . 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu ඊළනාඩු




Email : news@eelanadu.lk | மலர் : 04 | 29.08.2023 செவ்வாய்க்கிழமை | இதழ் : 262 | பக்கங்கள் : 16

### விகாரை கட்ட அனுமதி மறுப்பு:

# திருமலை மாவட்ட செயலகத்தில் பிக்குகள் முற்றுகை போராட்டம்!



திருகோணமலை, ஓகஸ்ட் 29

**திருகோணமலை மாவட்ட செயலகத்தை பிக்குகள் நேற்று முற்றுகையிட்டு போராடினர். அத்துடன், ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் நடந்த மண்டபத்துக்குள்ளும் புகுந்து களேபரத்தில் ஈடுபட்டனர்.**

தமிழ் மக்கள் செறிந்து வாழும் நிலாவெளி - பெரியகுளத்தில் இடைநிறுத்தப்பட்ட விகாரையின் கட்டுமானப் பணிகளை ஆரம்பிக்க அனுமதி வழங்கக் கோரியே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப் பட்டது.

விகாரை நிர்மாணத்துக்கு அனுமதி வழங்குமாறு கோரி திருகோணமலை மாவட்ட செயலகத்தை முற்றுகையிட்டு பிக்குகள் நேற்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.

விகாரை நிர்மாணத்துக்கு அனுமதி மறுக்கப்பட்டது தொடர்பாக ஆளுநர் பிக்குகளை அழைத்து விளக்கம் வழங்கினார். ஆனால், அவர்கள் அதனை ஏற்கவில்லை.

இந்நிலையில், ஒருங்கிணைப்புக் குழு கூட்டம்

11

## வீடு கிடைக்காத எம். பிக்கு மாதம் ரூ. 75,000 கொடுப்பனவு

கொழும்பு, ஓக. 29

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான குடியிருப்பில் வீடு கிடைக்காத எம். பிகளுக்கு மாதம் 75 ஆயிரம் ரூபாய் வழங்கப் பட்டுள்ளதாக தேசிய கணக்காய்வு அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாதிவெல பாராளுமன்ற உறுப்பினர் குடியிருப்பில் வீடுகள் கிடைக்காத 18 எம். பிகளுக்கு ஒரு கோடியே 16 இலட்சம் ரூபாய் இவ்வாறு வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

2021 ஆம் ஆண்டில் 10 எம். பிகளுக்கு 67 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாயும் கடந்த ஆண்டு 8 எம். பிகளுக்கு 48 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாயும்

11

## காணி மறுசீரமைப்பு குழுவின் காணிகளை மக்களுக்கு பகிர்க

### சிறீதரன் எம். பி. வடக்கு ஆளுநரிடம் கோரிக்கை

கிளிநொச்சி, ஓக. 29

கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவின் கீழுள்ள காணி சீர்திருத்த ஆணைக் குழுவுக்கு சொந்தமான காணிகளில் ஒரு பகுதியையேனும், யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களிலுள்ள காணியற்ற குடும்பங்களுக்கு பகிர்ந்தளிக்குமாறு பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் வடக்கு மாகாண ஆளுநரை கடிதம் மூலம் கோரியுள்ளார்.

இதுவிடயமாக பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் நேற்று வடக்கு மாகாண ஆளுநருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் மேலும் தெரிவித்தவை வருமாறு,

11

## குருந்தூர்மலை தமிழரின் காணிகள் விடுவிக்கப்பட உடனடி வாய்ப்பில்லை!

### செல்வம் அடைக்கலநாதன் எம். பி.

முல்லைத்தீவு, ஓக. 29

தண்ணிமுறிப்பு குருந்தூர் மலை பகுதியிலுள்ள தமிழ் மக்களின் பூர்வீக காணிகள் உடனடியாக விடுவிக்கப்படும் ஒரு சூழல் இல்லாதிருக்கின்றது என்று பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

தண்ணிமுறிப்பு - குருந்தூர்மலையில் தமிழ் மக்களின் பூர்வீக காணிகள் தொல்பொருள் திணைக்களத்தால் சுவீகரிக்கப்பட்ட நிலையில் குறித்த காணிகளை விடுவிப்பது தொடர்பில் நேற்று திங்கட்கிழமை அரசியல் தலைவர்கள், அரச அதிகாரிகள் உள் ளிட்டவர்கள் அங்கு சென்று

11



பிரசித்தி பெற்ற தெல்லிப்பழை துர்க்காதேவி அம்மன் ஆலய தேர்த் திருவிழா நேற்று இடம்பெற்றவேளை...!

## ஐக்கிய மக்கள் சக்தியுடன் விரைவில் பலமான கூட்டணி

### பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் அறிவிப்பு

கொழும்பு, ஓக. 29

ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து பலமிக்கதொரு கூட்டணியை ஸ்தாபிக்க பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்-

இப்போது நாட்டில் உள்ளது அரசாங்கமே கிடையாது. அரசாங்கத்தின் சலுகைகளை அனுபவிக்கும் ஒரு தரப்பினர் தான் நாட்டை ஆட்சி செய்கிறார்கள்.

இன்று நாட்டில் இலஞ்ச- ஊழல் அதிகரித்துள்ளது. இந்தக் குற்றங்கள் இடம்பெறாத வகையில் புதிய அரசாங்கமொன்று ஸ்தாபிக்கப்படவேண்டும்.

11

## அங்க பிரதட்சணம் செய்தவர் மரணம்!

வடமராட்சி, ஓக. 29

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் அங்கப் பிரதட்சணம் செய்த பக்தர் ஒருவர் திடீரென வீழ்ந்து உயிரிழந்தார்.

யாழ்ப்பாணம், நாவலர் வீதியை சேர்ந்த சின்னையா சுரேஷ்குமார் (வயது 57) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் அறிய வருவதாவது,

உயிரிழந்தவர் வழக்கமாக ஒவ்வொரு வருடமும் திருவிழா காலத்தில்

11

## யாழில் கத்திமுனையில் அச்சுறுத்தி கொள்ளையில் ஈடுபட்டவர்கள் கைது!

### 28 பவுண் நகைகள் மீட்பு

யாழ்ப்பாணம், ஓக. 29

யாழ்ப்பாணத்தில் அண்மை நாட்களாக கத்தியைக் காட்டி மிரட்டி தொடர் கொள்ளையில் ஈடுபட்டு வந்த முகமூடி கொள்ளையர்கள் நால்வர் நேற்று கைது செய்யப்பட்டனர்.

கைதானவர்கள் நல்லூர் பகுதியை சேர்ந்தவர்கள் என்றும் அவர்களிடம் இருந்து கொள்ளையிடப்பட்ட 28 பவுண் நகைகள் மீட்கப்பட்டன. அத்துடன், மோட்டார் சைக்கிள், வாள், 4 கைபேசிகள் என்பவை கைப்பற்றப்பட்டுள்ளன எனவும் யாழ். மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தக் கும்பல் கடந்த வியாழக்கிழமை இரவு கல்வியங்காட்டில் தேவாலயம் ஒன்றில் நுழைந்து பாதிரியாரை கத்திமுனையில் அச்சுறுத்தி

11

## இப்படியும் நடக்கிறது

அவர் ஒரு தீவிர இடதுசாரியாக தனது இளமைக்காலத்தில் செயல்பட்டவர். மலையகத்தில் ஒரு சாதாரண கூலித் தொழிலாளியின் மகனான அவர் சோசலிஷ நாடு ஒன்று உருவாகவேண்டும் என்று கனவு கண்டவர்.

தமிழீழத்துக்கான கனவுகளோடு தமிழ் இளைஞர்கள் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபடத் தொடங்கிய போது- பல இயக்கங்கள் உருவான போது- அதில் இடதுசாரி தத்துவங்களை வரித்துக் கொண்டு ஈழப்போராட் டத்தை தொடங்கியது பத்ம நாபாவின் ஈ. பி. ஆர். எல். எவ். இயக்கம். அந்த இயக்கத்தின் மீது பிடிப்பு ஏற்பட்டுவிட, அவர்களோடு சேர்ந்து இயங்கியவர்களில் அவரும் ஒருவர்.

தோழர் பெ. முத்துலிங்கம் என்ற அந்த போராளி பற்றி முன்னரும் ஒரு தடவை இந்தப் பத்தியில் குறிப்பிட்டிருக்கிறேன்.

கொழும்பில் ஒரு சைவ உணவகத்தில் உணவருந்திக் கொண்டிருந்தபோது தனது குடும்பத்துடன் அங்கே வந்திருந்தவர், இந்த ஊர்க்குருவியை அடையாளம் கண்டுகொண்டு எதிரே வந்து அமர்ந்தபோது தான் அவர் வந்ததையே கண்டேன்.

மலையகத்துக்கு இந்தியாவிலிருந்து தமிழர்கள் கொண்டு வரப்பட்டு குடியமர்த்தப்பட்ட இருநூறு வருடங்கள் பூர்த்தியானதையொட்டி கடந்த பல மாதங்களாக பல நிகழ்ச்சிகள் ஆங்காங்கே நடந்து வருகின்றன. அவ்வாறு நடக்கும் பல நிகழ்ச்சிகளை இவர் முன்னின்று ஏற்பாடுசெய்து நடத்தி வருகின்றார்.

கடந்த வாரம் முழுவதும், 'மலையகம் 200' என்ற தலைப்பில் மலையக வாழ்க்கையையும் அவர்களின் அவலங்களையும் சித்தரிக்கும் புகைப்பட கண்காட்சி ஒன்றை கொழும்பில் பொதுநூலக கேட்போர் கூடத்தில் ஏற்பாடு செய்திருந்தார் அவர்.

'தோழர், கட்டாயம் வந்து பாருங்கள்' என்று அழைப்பு விடுத்தார். போகவேண்டும் என்று நினைத்தபோதிலும் திடீரென்று யாழ்ப்பாணம் வரவேண்டியிருந்ததால் போய் பார்க்க முடியவில்லை.

ஆனால், அவர் அந்த நிகழ்ச்சியை நடத்தத் தொடங்கியதிலிருந்து தான் சந்தித்த பல விடயங்களை அப்போது பகிர்ந்து கொண்டார்.

ஒரு நாள் ஒரு சிங்கள இளைஞன் கண்காட்சியை பார்த்து விட்டு அவருடன் வந்து பேசியிருக்கிறான். அவனது கவலை எல்லாம் மலையக மக்களை சாதி ரீதியாக யாழ்ப் பாணம் நடத்துகின்றது என் றும் அந்த அவலத்தை புகைப் படக் கண்காட்சி பதிவு செய்யவில்லை என்பதும் தான்.

தான் ஒரு நிறுவனத்தில் சமூக தணிக்கையாளராக (Social Auditor) பணியாற்றுகிறார் எனவும் யாழ்ப்பாணத்துக்கு பணிக்கு போகும்போது தனது உதவியா ளர் மலையகத்தவர் என்பதை அறிந்ததும் அங்குள்ள மக்கள் அவரை அழைத்து வந்ததை விரும்பவில்லை என்றும் யாழ்ப்பாணத்தவர்கள் மலையகத் தமிழர்களை குறைவானவர்களாக பார்ப்பதையல்லவா நீங்கள் இங்கே முக்கியத்துவப் படுத்தியிருக்க வேண்டும் என்று கூறியிருக்கிறார்.

அதற்கு அவர் சொன்னதாகக் கூறிய பதில் எனக்கும்தான் ஆச்சரியமானதாக இருந்தது.

'சாதிப் பிரச்னை ஏதோ யாழ்ப்பாணத்தில் மட்டும்தான் இருக்கிறதா? ஏன் உங்கள் மத்தியில் இல்லையா? உமக்குத் தெரியுமா சிறிமாவோ பண்டாரநாயக்கா பிரதமராக இருந்தபோது தனது சாதிக்கார எம். பிக்களை மாத்திரம்தான் பெயர்சொல்லி அழைப்பார். மற்றவர்களை அவர்களின் தொகுதிப் பெயர் சொல்லித் தான் அழைப்பார்...' என்றாராம்.

அதன்பின்னர் அந்த இளைஞன் மறுபேச்சின்றி நகர்ந்திருக்கிறார். அவரது நோக்கம் மலையகத் தமிழர்களையும் யாழ்ப்பாணத் தமிழர்களையும் 'சிண்டுமுடிஞ்சு' விடுவதுதான் என்பதை நண்பர் புரிந்துகொண்டார்.

'அது மாத்திரமில்லை தோழர், நாளைக்கு சாகப்போற கிழடுகள் கூட... வந்து இன வாதம் பேசுது..' என்றவர், ஒரு வயோதிபர் வந்து கேட்டாராம், 'நீங்கள் இந்த நாட்டுக்கு வந்து இருநூறு வருசம்தான் ஆகுது... சரி, அப்ப அவை?' என்று கேட்டாராம்.

அவர் யாரைக்கேட்கிறார் என்பதை புரிந்துகொண்டதால் நான் சொன்னேன், 'அவை நீங்கள் வருகிறதுக்கு முன்னரே வந்துவிட்டினம்தானே?' என்று.

வயோதிபருக்கு வந்த கோபத்தை அடக்கமுடியவில்லையாம், 'கேரளாவிலிருந்து வந்த அந்த மலபாரியள்... எப்படி எங்களுக்கு முதல் வந்தவங்கள்? என்று பாய்ந்திருக்கிறார்.

இப்படி பல கதைகளை அவர் சொல்லிக்கொண்டே இருந்தபோது, ஒரு விடயத்தை மாத்திரம் புரியமுடிந்தது.

அண்மைக்காலமாக வெடுக்குநாறி மலை, குருந்தூர் மலை, தையிட்டி விகாரை என்று பரபரப்பாக பேசப்படும் விடயங்களை சிங்கள ஊடகங்கள் ஊதிப்பெருக்குவது சிங்கள சாதாரணர்கள் மத்தியில் எப்படியெல்லாம் விஷமாக விதைக்கப்படுகின்றது என்பது புரிந்தது.

- ஊர்க்குருவி.

# கொழும்பு சிங்களவர் தலைநகரம் யாருமே உரிமை கோர முடியாது!



### கூறுகின்றார் உதய கம்மன்பில

கொழும்பு, ஓக. 29

வடக்கு-கிழக்கு தமிழர்களின் தாயகம் என்றால் கொழும்பு சிங்களவர்களின் தலைநகரம் என பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கை சிங்கள பௌத்த நாடு. இந்த நாட்டில் எந்த இடத்தையும் தமிழர்களுக்குச் சொந்தம் என்று தமிழ் அரசியல்வாதிகள் உரிமை கோர முடியாது.

வடக்கு - கிழக்கு தமிழர்களின் தாயகம் அல்ல. அங்கு மூவின மக்களும் வாழ்கின்றார்கள். இந்நிலையில், மூவின மக்களின் ஒற்றுமையைச் சீர்குலைக்கத் தமிழ் அரசியல்வாதிகள் முயல்கின்றார்கள். இதனால் தெற்கிலும் பாதிப்பு ஏற்பட வாய்ப்பு உள்ளது.

வடக்கு - கிழக்கில் விகாரைகளை நிறுவுதல் பௌத்தமயமாக்கல் எனில் தெற்கில்-கொழும்பில் இந்துக் கோயில்கள் கட்டப்பட்டமை இந்து மயமாக்கலா?

வடக்கு-கிழக்கில் சிங்களவர்கள் குடியேறுதல் சிங்களமயமாக்கல் எனில் தெற்கில்-கொழும்பில் தமிழர்கள் குடியமர்ந்துள்ளமை தமிழர் மயமாக்கலா? தமிழ் அரசியல்வாதிகள் முதலில் வரலாற்றைப் படிக்க வேண்டும் - என்றார். (அ)

# அரசாங்க வாகனங்கள் குறித்து கணக்கெடுப்பு நடத்த தீர்மானம்!

கொழும்பு, ஓக. 29

அரசாங்க அமைச்சுகளின் திணைக்களங்கள், நிறுவன சபைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களில் உள்ள வாகனங்கள் பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் கணக்கெடுப்பு ஒன்றை மேற்கொள்ள நிதியமைச்சு தீர்மானித்துள்ளது.

இந்த நிறுவனங்களில் உள்ள வாகனங்கள் குறித்த தகவல்களை எளிய தொழில்நுட்ப செயல்முறை மூலம் திறைசேரி பெற்றுக்கொள்ளும் வகையில், இதற்காக புதிய கணினி மென்பொருள் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த மென்பொருளில் சகல வாகனங்கள் தொடர்பான தகவல்களையும் உள்ளிடுமாறு அமைச்சு முன்னதாக சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு அறிவித்துள்ளதாக நிதி அமைச்சின் செயலாளர் மகிந்த சிறிவர்தன தெரிவித்துள்ளார்.

நிதி அமைச்சு முன்னதாக கடந்த 2015 ஆம் ஆண்டு இத்தகைய கணக்கெடுப்பை நடத்தியது. பயன்படுத்தக்கூடிய மற்றும் பயன்படுத்த முடியாத வாகனங்களின் எண்ணிக்கையை துல்லியமாக மதிப்பிடுவதே இந்த கணக்கெடுப்பின் நோக்கமாகும் என அவர் குறிப்பிட்டுள்ளார். முன்னதாக மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பில், அரசு நிறுவனங்களில் சுமார் 80 ஆயிரம் வாகனங்கள் உள்ளதாக கண்டறியப்பட்டது.

இந்த முறை மத்திய அரசாங்கத்திற்கு சொந்தமான வாகனங்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுக்கு சொந்தமான வாகனங்கள் பற்றிய தகவல்கள் முறைப்படி ஆய்வு செய்யப்பட்டு சேகரிக்கப்படும் என நிதி அமைச்சின் செயலாளர் மகிந்த சிறிவரத்தன குறிப்பிட்டார்.

(ஐ)

## சிறப்பு சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஓக. 29

நீர்வேலி கந்தசுவாமி கோயிலில் நடத்தப்படும் வாராந்த சுக்கிரவாரச் சிறப்புச் சொற்பொழிவு ஆலய சண்முக விலாச மண்டபத்தில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிக்கு சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் இடம்பெறவுள்ளது.

பரிபாலன சபைத் தலைவர் த.சோதிலிங்கத்தின் தலைமையைத் தொடர்ந்து சிறப்புச் சொற்பொழிவை இளம் சைவப் புலவர் க. கயிலைநாதன் 'உருவாய் அருவாய்' என்னும் விடயப்பொருளில் ஆற்றுவார்.

சொற்பொழிவின் இறுதியில் மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டு பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஓக. 29

'வரலாற்று ஆய்வுகளும் மானுட மேம்பாடும்' என்ற தலைப்பிலான சமூக விஞ்ஞானப் படிப்பு வட்ட விசேட கலந்துரையாடல் நாளை புதன்கிழமை மாலை 4 மணிக்கு கே.கே.எஸ். வீதி கொக்குவில் சந்தியில் உள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் தொடக்க உரையை ஆய்வாளர் சு.சத்தியதேவன் ஆற்றவுள்ளார். தொடர்ந்து சபையோரின் கருத்துரைகளுடன் திறந்த கலந்துரையாடல் நடைபெறும்.

# துப்பாக்கி சூட்டில் ஒருவர் உயிரிழப்பு!

கொழும்பு, ஓக. 29

கொழும்பில் நேற்று நடந்த துப்பாக்கி பிரயோகத்தில் ஒருவர் மரணிமானார் என்று தெரிவித்த வெல்லம்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பு - வெல்லம்பிட்டி - கித்தம்பஹுவ பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற இந்த துப்பாக்கி சூட்டில் மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத இருவர், ஓட்டோவில் பயணித்துக் கொண்டிருந்தவரை இலக்கு வைத்து துப்பாக்கி சூடு நடத்தினர்.

இதில், 47 வயதான நபரே உயிரிழந்தார். மேலதிக விசாரணைகளை வெல்லம்பிட்டி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(ஐ)



தேசிய கலை இலக்கியப் பேரவையின் ஏற்பாட்டில் அரியாலை கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் இடம்பெற்ற 13 ஆவது புத்தக அரங்க விழாவின் முதல் நாள் நிகழ்வில் இடம்பெற்ற நாடகத்தின் காட்சியின் பதிவு.

ஈழநாடு
Eelanadu
29.08.2023 செவ்வாய்க்கிழமை
சோபகிருது வருடம், ஆவணி 12

“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# 14 வருடகால தமிழர் அரசியல்

சிங்கள - பௌத்தர்கள் தமிழர் பகுதியை ஆக்கிரமிப்பதான குற்றச்சாட்டுக்கள் தொடர்கின்றன. ஆகக்குறைந்தது, அரசமைப்பின் ஊடாக உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்ற விடயங்களைக்கூட அமுல்படுத்த முடியவில்லை. அதற்கும் வெளியாரின் தலையீடுகள் தேவைப்படுகின்றன. ஆனால், அவர்களோ தமிழரின் எதிர்பார்ப்புக்கு ஏற்றவாறான தலையீடுகளை இதுவரையில் செய்யவில்லை.

ஆரம்பத்தில் மேற்குலக நாடுகளை நோக்கி தமிழர் தரப்புகள் கோரிக்கைகளை முன்வைத்திருந்தனர் - குறிப்பாக, ஜெனிவாவுக்கு வருடந்தோறும் சென்று முகாமிட்டனர். ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் பக்க நிகழ்வுகளில் பேசித் தீர்த்தனர். புலம்பெயர் அமைப்புகள் ஏட்டிக்கு போட்டியாக செயல்பட்டனர். பல்வேறு வெளிநாட்டு தரப்புகளுடன் பேசியதாகக் கூறின. இங்கு கவனிக்க வேண்டிய விடயம் ஆரம்பத்தில் எவருமே 13ஆவது திருத்தச் சட்டத்தை உச்சரிக்கக்கூட இல்லை.

சம்பந்தனைப் பொறுத்தவரையில் தாங்கள் அதனைத் தாண்டி அதிக தூரம் சென்றுவிட்டோம் என்றார். அதனைப் பற்றி பேசுவதற்கு ஒன்றுமில்லை என்றார். ஆனால், இப்போது அதனை அமுல்படுத்துவதற்கு இந்தியாவின் உதவியை தமிழர் தரப்புகள் கோருகின்றன. அதனைக் கோர விரும்பாதவர்கள் சமஷ்டியை பெற்றுத் தருமாறு புதுடில்லியை கோருகின்றனர். 2015இற்கு பின்னர், புதிய அரசியல் யாப்பொன்றின் மூலம் அரசியல் தீர்வை காணப் போவதாக சம்பந்தனும் சுமந்திரனும் உறுதியாகக் கூறினர். இறுதியில் எதுவுமே நடைபெறவில்லை.

ஆனால், இப்போதும் ஒரே விடயங்களே தமிழர் அரசியல் பரப்பில் உச்சரிக்கப்படுகின்றன. விகாரைகளை நிறுவுவதன் ஊடாக ஆக்கிரமிப்புகள் தொடர்வதான குற்றச்சாட்டே இப்போதும் முன்வைக்கப்படுகின்றது. அவ்வாறாயின், யுத்தத்துக்கு பின்னரான கடந்த 14 வருடகால தமிழர் செயல்பாடுகளுக்கு என்ன நடந்தது? உருப்படியாக தமிழர் தரப்புகள் ஒன்றையும் செய்யவில்லையா - அதனால்தான் முன்னைய நிலைமை அப்படியே தொடர்கின்றதா?

கடந்த 14 வருட கால தமிழர் செயல்பாடுகள் வெற்றிகரமானதாக - சிங்கள, பௌத்த சக்திகளை அச்சுறுத்தக்கூடியதாக - சிங்கள ஆளும் வர்க்கத்தின் மீதான கடும் அழுத்தங்களாக இருந்திருப்பின் - அவர்களால் எவ்வாறு இப்போதும் முன்னரைப் போல் எதேச் சாதிகார சிந்தனையுடன் - ஒடுக்குமுறை மனோபாவத்துடன் செய லாற்ற முடியும்? ஒன்றில் தமிழர்களின் அரசியல் செயல்பாடுகள் தாக்கம் மிக்கதாக இருக்கவில்லை - அல்லது தமிழர் தரப்புகள் மேற்குலக அழுத்தங்களை குறிப்பாக, அமெரிக்காவின் - இந்தியா வின் அணுகுமுறைகளை சரியாக விளங்கிக்கொள்ளவில்லை - அல்லது விளங்கிக்கொள்ள முடியவில்லை - இவைதானே, தமிழரின் இன்றைய நிலைக்குக் காரணமாக இருக்க முடியும்?

பிரச்னைகளை சரியாக விளங்கிக் கொள்ளாவிட்டால் - இப்போதிருக்கும் நிலைமைதானே தொடரப் போகின்றது. வெறும் தேர்தல் கோஷமாகத்தானே தமிழரின் கோரிக்கைகள் சுருங்கிப் போகப் போகின்றன. ஒருபுறம் வசதியுள்ள மக்கள் நாட்டைவிட்டு வெளியேறிக் கொண்டிருக்கும்போது ஏழை மக்கள் மேலும் நிர்க்கதி நிலைக்குள் தள்ளப்பட்டு பழங்குடி நிலையில் வாழ்வார்கள். இந்த நிலைமையிலிருந்து விடுபட வேண்டுமாயின் புதிய அணுகுமுறைகளும் புதிய நகர்வுகளும் அல்லவா தேவைப்படுகின்றன.

# “குருந்தூரில் குழப்பமேற்படுத்தியவர் தொடர்பாக முறைப்பாடு இல்லை!”

முல்லைத்தீவு, ஓக. 29

குருந்தூர்மலையில் குழப்பத்தை தூண்டியவர் குறித்து எந்த வித முறைப்பாடுகளும் இல்லை. இதனால், இது தொடர்பில் எவரையும் கைதுசெய்ய முடியாத நிலையில் உள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பாராளுமன்றத்தில் கடந்த வாரம் வெளியிட்ட அறிக்கையில் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் குருந்தூர்மலையை அடிப்படையாகவைத்து உருவாகும் குழப்பநிலைக்கு காரணமான நபரை புலனாய்வு பிரிவினர் அடையாளம் கண்டுள்ளனர் என தெரிவித்தார்.

இது குறித்து கேள்வி எழுப்பியவேளை இது தொடர்பில் எந்த முறைப்பாடும் முன்வைக்கப்படவில்லை நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை என பொலிஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

விசாரணைகளை ஆரம்பிப்பதற்கு முறைப்பாடுகள் அவசியம் முறைப்பாடுகள் இல்லாமல் விசாரணைகளை முன்னெடுக்கவோ, கைதுசெய்யவோ முடியாது. எனினும், குருந்தூர் மலையை சுற்றியுள்ள பகுதிகளில் இடம்பெற்ற சிறிய சம்பவங்கள் குறித்து அரசியல் தலையீடுகள் இல்லாமல் விசாரணைகள் இடம்பெறுகின்றன - என்றும் அவர் கூறினார். (ஐ)

## தோணிக்கல் இரட்டைக்கொலை:
# பிரதான சந்தேகநபரின் சகோதரர் மீது தாக்குதல்

வவுனியா, ஓக. 29

வவுனியா, தோணிக்கல் பகுதியில் இடம்பெற்ற இரட்டை கொலை சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபரின் சகோதரர்மீது சிலர் தாக்குதல் நடத்தியுள்ளனர். இதில், அவர் காயமடைந்த நிலையில் வவுனியா மருத்துவமனையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

வவுனியா, தோணிக்கல் பகுதியில் கடந்த மாதம் 23 ஆம் திகதி இடம்பெற்ற இரட்டை கொலை சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள பிரதான சந்தேக நபரின் சகோதரர் மீதே சனிக்கிழமை இரவு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த நபர் வசித்து வரும் தவசிகுளம் பகுதியில் வைத்து இத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இந்தத் தாக்குதல் சம்பவத்தில் பிரதான சந்தேக நபரின் சகோதரரான 37 வயதுடைய நபர் படுகாயமடைந்து வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# கொழும்பில் போராட்டம்; 24 பேருக்கு தடையுத்தரவு

கொழும்பு, ஓக. 29

கொழும்பில் நேற்று நடத்தத் திட்டமிடப்பட்டிருந்த போராட்டத்தின் போது தொழில்சங்கங்கள் மற்றும் அரசியல் கட்சிகளை சேர்ந்த 24 பேருக்கு கோட்டை நீதிவான் நீதிமன்றம் கொழும்பின் சில பகுதிகளுக்குள் பிரவேசிக்கத் தடை விதித்துள்ளது.

பொலிஸாரின் கோரிக்கையின் பிரகாரம் பிறப்பிக்கப்பட்ட தடையுத்தரவின் படி குறித்த குழுவானது ஜனாதிபதி செயலகம், நிதியமைச்சு வளாகம் மற்றும் இலங்கை மத்திய வங்கிக்குள் நுழைய தடை விதிககப்பட்டுள்ளது.

குறித்த 24 பேரில் அரசியல் தரப்பினரான ஹிருணிகா பிரேமசந்திர, துமிந்த நகமுவ, முஜிபுர் ரஹ்மான் வாசுதேவ நாணயக்கார மற்றும் பேராசிரியர் சரித ஹேரத் ஆகியோரும் உள்ளடங்குவர் என்று தெரிய வருகின்றது.

(ஐ)

# பெரியபுராணம் சிறப்பு சொற்பொழிவு


யாழ்ப்பாணம், ஓக. 29

சைவ வாழ்வியலில் பெரிய புராணம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சிவஸ்ரீ பால. திருகுணானந்த குருக்கள் நடத்தும் வாராந்த பெரிய புராண சிறப்புச் சொற்பொழிவு தொடர் 21 (அதிபத்த நாயனார்) பன்னாலை திருவருள் மிகு சிவபூதராயர் ஆலயப் பிரதான மண்டபத்தில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறும் இந்த நிகழ்வில் சேக்கிழார் பெருமானின் குருபூஜையை தொடர்ந்து சொற்பொழிவை இளம் சைவப் புலவர் நித்திய பாபுதரன் ‘முதல்மீனைச் சிவனுக்கு என்று கடலில் விட்ட நாயனார் ‘ என்னும் விடயப்பொருளில் நடத்துவார்.

சொற்பொழிவின் இறுதியில் மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டு பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



ஒகஸ்ட் - 29 செவ்வாய்க்கிழமை
சோபகிருது வருடம் - ஆவணி 12
நல்ல நேரம் : 07.30 - 09.00
ராகு காலம் : 03.00 - 04.30
திதி : சதுர்த்தி




**மேடம்**
கணவன்-மனைவிக்குள் மனம் விட்டு பேசுவீர்கள். அவசரத்திற்கு கைமாற்றாக வாங்கியிருந்த பணத்தை திருப்பித் தருவீர்கள். வியாபாரம் வசூலாகும். புது அதிகாரி உங்களை மதிப்பார். மாற்றம் உண்டாகும்.

**இடபம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் புதிய முயற்சிகள் தள்ளிப் போய் முடியும். வியாபாரத்தில் பழைய சரக்குகளை போராடி விற்பீர்கள். மற்றவர்களின் வேலையையும் சேர்த்து பார்க்க வேண்டி வரும்.

**மிதுனம்**
உங்களின் திறமைகளை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் கிடைக்கும். வாகனத்தை சீர் செய்வீர்கள். வியாபாரத்தில் நெளிவு சுளிவுகளை கற்றுக் கொள்வீர்கள். பெரிய பொறுப்புகளை ஏற்பீர்கள்.

**கடகம்**
குடும்பத்தினருடன் சுபநிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். வழக்கில் திருப்பம் ஏற்படும். வியாபாரத்தில் ரெட்டிப்பு லாபம் உண்டு. சில புதுமைகளைச் செய்து எல்லோரின் கவனத்தையும் ஈர்ப்பீர்கள்.

**சிம்மம்**
புதிய முயற்சிகள் யாவும் வெற்றியடையும். அநாவசிய பேச்சை தவிர்ப்பது நல்லது. சக ஊழியர்கள் உங்கள் வேலைகளைப் பகிர்ந்துக் கொள்வார்கள். நினைத்தது நிறைவேறும் நாள்.

**கன்னி**
எதிர்பார்த்த வேலைகள் தடையின்றி முடியும். தாயாருக்கு கை கால் வலி சோர்வு வந்து போகும். வியாபாரத்தில் புது பங்குதாரரை சேர்ப்பீர்கள். சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள்.

**துலாம்**
சவால்களில் விவாதங்களில் வெற்றி பெறுவீர்கள். உடன்பிறந்தவர்கள் ஒத்தாசையாக இருப்பார்கள். அரசால் அனுகூலம் உண்டு. வியாபாரத்தில் எதிர்பாராத தனலாபம் உண்டு. தைரியம் கூடும் நாள்.

**விருட்சிகம்**
குடும்பத்தில் நிம்மதி உண்டு. இழுபறியாக இருந்த வேலைகள் முடியும். பணம் கைக்கு வரும். வெளியூரிலிருந்து நல்ல செய்தி வரும். சக ஊழியர்கள் உதவுவார்கள். தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**தனுசு**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் நினைத்த வேகத்தில் சில வேலைகளை முடிக்க முடியாமல் தடை தாமதம் ஏற்படும். அதிகாரிகளால் அலைக்கழிக்கப் படுவீர்கள். சகிப்புத் தன்மை தேவைப்படும் நாள்.

**மகரம்**
மறைமுக விமர்சனங்களும் தாழ்வுமனப்பான்மையும் வந்துச்செல்லும். வியாபாரத்தில் போட்டிகளையும் தாண்டி லாபம் வரும். சக ஊழியர்களால் சங்கடங்கள் வரும். உழைக்க வேண்டிய நாள்.

**கும்பம்**
கடந்த கால இனிய அனுபவங்களை நினைவுக் கூர்ந்து மகிழ்வீர்கள். வியாபாரத்தில் சிறந்த வாடிக்கையாளர்கள் தைரியமாக முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். சிந்தனைத் திறன் பெருகும் நாள்.

**மீனம்**
உங்கள் செயலில் வேகம் கூடும். சிலர் உங்களை நம்பி முக்கிய பொறுப்புகளை ஒப்படைப்பார்கள். வியாபாரத்தில் கூடுதல் லாபம் கிடைக்கும். தலைமையின் நம்பிக்கையை பெறுவீர்கள்.

# தமிழ்நாட்டில் மோடி போட்டியிட்டால் அவரை எதிர்த்துப் போட்டியிடுவேன்!

## சீமான் அறிவிப்பு

தூத்துக்குடி, ஒக. 29

இராமநாதபுரத்தில் பிரதமர் மோடி போட்டியிட்டால் அவரை எதிர்த்து போட்டியிடுவேன் என நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்துள்ளார்.

தூத்துக்குடி மாவட்டம் காயல்பட்டிணத்தில் நாம் தமிழர் கட்சியின் நிர்வாகியின் திருமண விழாவில் பங்கேற்று பேசியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், “ பிரதமர் மோடி தமிழ்நாட்டில் தேர்தலில் போட்டியிட்டால் அவரை எதிர்த்து நான் போட்டியிடுவேன். அப்போது எனக்கு ஒரு விடிவு காலம் வரும். விடுதலை பெற்ற இந்தியாவில் எத்தனை கிறிஸ்தவர்கள், இஸ்லாமியர்கள் பிரதமராக இருந்துள்ளார்கள்.

ஒன்றுக்கும் பயன்படாத றபர் ஸ்ராம்ப் பதவி மட்டும்தான் கொடுத்துள்ளார்கள். சிறுபான்மை மக்களுக்கு எந்த சலுகையும் கொடுக்கப்படவில்லை. சிறுபான்மை மக்களுக்கு மட்டும் ஜி. எஸ். டி. வரி விதிப்பு குறைத்துள்ளார்களா..?

ஒருவர் மதத்தை மாற்ற முடியும். ஆனால் மொழியையும் இனத்தையும் மாற்ற முடியுமா? அப்படி இருக்க என்ன சிறுபான்மை, பெரும்பான்மை என்ற பிரிவினை. இதனால்தான் சிறுபான்மை என்று சொன்னால் செருப்பால் அடிப்பேன் என்று சொன்னேன் - என்றார். (ஐ)

# 2ஜி ஊழலை மக்கள் எளிதில் மறந்துவிட மாட்டார்கள்!

## பா. ஜ. க. விமர்சனம்

சென்னை, ஒக. 29

2-ஜி ஊழலை மக்கள் எளிதில் மறந்துவிட மாட்டார்கள் என்று பா. ஜ. க. மாநிலத் தலைவர் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பவை வருமாறு,

திருமண விழா ஒன்றில் பேசிய முதல்வர் ஸ்டாலின், சி. ஏ. ஜி. அறிக்கையால் மத்திய அரசின் 7 விதமான ஊழல்கள் அம்பலமாகியிருக்கின்றன என்று அப்பட்டமாக பொய் சொல்லியிருக்கிறார்.

சி. ஏ. ஜி. அறிக்கையில், நெடுஞ்சாலை அமைப்பதில் செலவினங்கள் அதிகரித்துள்ளன என்றுதான் கூறப்பட்டிருக்கிறது. துவாரகா விரைவு சாலை அமைப்பதில் செலவினங்கள் அதிகரித்ததற்கு, வடிவமைப்புத் திட்டங்களில் ஏற்பட்ட மாறுதல்தான் காரணம் என்று சி. ஏ. ஜி. அறிக்கையிலேயே குறிப்பிட்டுள்ளார்கள்.

எதற்காக இந்த மாறுதல் என்பதுதான் சி. ஏ. ஜி. அறிக்கையின் கேள்வியே தவிர, ஊழலோ, முறைகேடோ நடந்துள்ளது என்று அறிக்கையின் எந்தப் பக்கத்திலும் கூறப்படவில்லை. உலக அளவில் ஊழலுக்கான அடையாளங்களாக விளங்கும் தி. மு. க., காங்கிரஸ் கட்சிகளுக்கு, எதில் எல்லாம் ஊழல் செய்ய முடியும் என்பது நிச்சயம் தெரிந்திருக்கும்.

2-ஜி ஊழல் குறித்த சி. ஏ. ஜி. அறிக்கையை அத்தனை எளிதாக நாட்டு மக்கள் மறந்துவிட மாட்டார்கள். ஊழல், முறைகேடு, மோசடி, அரசுக்கு இழப்பு என்ற வார்த்தைகள் அனைத்தும் 2-ஜி ஊழல் குறித்த சிஏஜி அறிக்கையில் இருந்தது.

நேர்மையான பிரதமர் மோடி தலைமையிலான மத்திய அரசின் மீது திமுக வீண் பழி சுமத்துவதை, எக்காலத்திலும் மக்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் - என்றுள்ளது. (ஐ)

# தென்தமிழகத்தை அழிவிலிருந்து அரசாங்கம் பாதுகாக்க வேண்டும்!

## ம. தி. மு. க. வைகோ வலியுறுத்து

சென்னை, ஒக. 29

கூடங்குளம் அணு உலைகளை மூடி தென் தமிழகத்தை அழிவிலிருந்து பாதுகாக்க வேண்டும் என்று மறுமலர்ச்சி திராவிட முன்னேற்ற கழக (ம. தி. மு. க.) பொதுச் செயலாளர் வைகோ வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் நேற்றுவிடுத்த அறிக்கையில் கூறியிருப்பவை வருமாறு,

கூடங்குளம் அணு உலைகளால் தென் தமிழகமே அழிந்து போகும் என்று நான் பலமுறை எச்சரித்துள்ளேன். உதாராணத்துக்கு, ஜப்பானில் புகுசிமா அணு உலை அமைக்கப்பட்டபோதே மக்கள் எதிர்த்தார்கள். அமெரிக்காவில் 3 மைல் தீவில் அமைக்கப்பட்ட அணு உலையால் இலட்சக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டனர்.

அதேபோல, சோவியத் ரஷ்யாவில் அமைக்கப்பட்ட செர்னோபில் அணு உலையில் விபத்து நேரிட்டு, லட்சக்கணக்கான மக்கள் வெளியேறினர், எண்ணற்றோர் இறந்தார்கள். ஜப்பானில் அணு உலைக் கழிவு நீரை பசிபிக் கடலில் திறந்து




விட்டுள்ளார்கள். ஜப்பானியர்கள் அணு உலைகளை எதிர்த்துப் போராடி வருகிறார்கள்.

இதேபோல, கூடங்குளம் அணு உலையில் சேமித்து வைக்கப்பட்டிருக்கும் அணு உலைக் கழிவுநீரை வங்காள விரிகுடாவில்தான் திறந்துவிடுவார்கள். இதனால் இடிந்தகரை உள்ளிட்ட நூற்றுக்கணக்கான கிராமங்கள் அழிந்துபோகும். நம் தலை மீது பேராபத்து கத்திபோல் தொங்கிக் கொண்டிருக்கிறது. எனவே, கூடங்குளத்தில் அணு உலைகளை மூடுவதுஒன்றுதான், எதிர்காலத்தில் தென்தமிழகத்தைப் பாதுகாக்கும்.

நிலவில் கால் வைக்கலாம். ஆனால், தமிழகத்தின் ஒரு பகுதி அழிந்துபோகும் என்பதை மத்திய அரசுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். ஒன்றரை ஆண்டு காலம்இடிந்தகரை மக்கள் போராடினர். அரசுகள் கண்டு கொள்ளவில்லை.

போராடியவர்கள் மீது வழக்குகள் போடப்பட்டன. என் மீதும்கூடஒரு வழக்கு இருக்கிறது. நான்அதைப்பற்றிக் கவலைப் படவில்லை. கூடங்குளம் அணு உலைகளால் தென் தமிழகத்தின் ஒரு பகுதி அழிவுக்கு உள்ளாகும் என்று மீண்டும் எச்சரிக்கிறேன் - என்றுள்ளது. (ஐ)

# நாட்டின் பாகங்களைப் பிற நாடுகளுக்கு விற்பதால் அழிவுப் பாதைக்கே செல்வோம்

## அரசை எச்சரிக்கிறார் கர்தினால் மல்கம் ரஞ்சித்



ராகம தேவத்தை தேவாலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஞாயிறு திருப்பலியின் போது கருதினால் இவ்வாறு கூறினார்.

இலங்கை எப்போதுமே சுதந்திரமாக இருந்த நாடு என்று தெரிவித்த அவர், நாம் ஒருபோதும் எந்த அரசுக்கும் அடிமைகளாக இருந்ததில்லையெனவும் கூறினார்.

கொழும்பு, ஒக. 29

**இலங்கை நாட்டின் பாகங்களை பிற நாடுகளுக்கு விற்பது இந்நாட்டை அழிவுப் பாதைக்கு இட்டுச்செல்வதாக பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்தார்.**

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே பாலம் அமைப்பது குறித்து கருத்து தெரிவித்த கர்தினால், இது தொடர்பில் மக்களின் நிலைப்பாடு என்ன என்பது பற்றி அறிய பொதுஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டுமென தெரிவித்தார்.

பொதுமக்களின் அங்கீகாரமின்றி இவ்வாறான தீர்மானங்களை மேற்கொள்வது தவறானது எனவும் அவர் வலியுறுத்தினார்.

எமது தேசத்தின் பாகங்களைப் பிறிதொரு நாட்டுக்கு விற்பதன் மூலம் இலங்கை பிற தேசங்களுக்கு அடிபணியும் நிலை உருவாகியுள்ளது. நாட்டை அழிக்கும் முட்டாள்தனமான தீர்மானங்களை அதிகாரத்தில் இருப்பவர்கள் எடுக்கின்றனர். சுதந்திரத்தை பெற்று இப்போது நாம் சுதந்திரத்தை இழக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என அவர் மேலும் குறிப்பிட்டார். (அ)

# வாட்டி வதைக்கின்றது வறட்சி 84,613 குடும்பங்கள் பாதிப்பு

கொழும்பு, ஒக. 29

கண்டி, பதுளை, மாத்தளை உட்பட நாட்டில் 18 மாவட்டங்களில் நிலவும் கடும் வறட்சியால் 84 ஆயிரத்து 643 குடும்பங்களைச் சேர்ந்த 2 லட்சத்து 91 ஆயிரத்து 715 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சப்ரகமுவ மாகாணத்தில் 55, 091 பேரும், கிழக்கு மாகாணத்தில் 63,265 பேரும், வடமேல் மாகாணத்தில் 23, 534 பேரும், வடக்கு மாகாணத்தில் 75, 607 பேரும், ஊவா மாகாணத்தில் 20, 052 பேரும், தென் மாகாணத்தில் 17, 372 பேரும், மத்திய மாகாணத்தில் 32, 695 பேரும் கடும் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளனர். (அ)

# மலைப்பகுதியில் தீ பரவல்!

கொழும்பு, ஒக. 29

இரத்தினபுரி மாவட்டம் பெல்மடுல்ல பொலிஸ் பிரிவிற்குட்பட்ட குட்டப்பிட்டிய பகுதியில் உள்ள தொட்டிகலம மலைப்பகுதியில் திடீரென தீ பரவியுள்ளது.

பெல்மடுல்ல பொலிஸாருக்கு நேற்று முன் தினம் இரவு இராணுவம் மற்றும் பிரதேசவாசிகளின் உதவியுடன் தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தீயினால் சுமார் 07 ஏக்கர் நிலப்பரப்பு தீயில் எரிந்து நாசமாகியுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பெல்மடுல்ல பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# எஸ்.கே.நாதன் பவுண்டேசனால் மாணவருக்கு கற்றல் உபகரணம்



கொழும்பு, ஒக. 29

எஸ்.கே.நாதன் பவுண்டேசனின் பணிப்பாளர் சுப்பிரமணியம் கதிர்காமநாதன் நேற்று தான் கல்வி கற்ற பாடசாலைகளான காரைநகர் யாழ்ற்றன் கல்லூரி, ஆயிலி சிவஞானோதயா வித்தியாசாலை ஆகியவற்றுக்கு விஜயம் செய்ததோடு பாடசாலையில் கல்வி கற்கும் 490 மாணவர்களுக்கும் புத்தகப்பைகள் வழங்கினார்.

கடந்த காலங்களில் இப்பாடசாலைகளுக்காக பல மில்லியன் ரூபாக்களில் பல அபிவிருத்திகளை நாதன் செய்து கொடுத்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# 21 போலி ஆவணங்களுடன் நுவரெலியாவில் ஜோடி கைது

கொழும்பு, ஒக. 29

போலி ஆவணங்களை தயாரித்து விநியோகித்தனர் என்றக் குற்றச்சாட்டின் கீழ், நுவரெலியாவில் வைத்து இளைஞனும் யுவதியும் கைது செய்யப்பட்டனர்.

போலியான ஆவணங்கள் பலவற்றை தயாரித்துக்கொண்டு ஒரு ஜோடி காரொன்றில் நுவரெலியா நகரத்துக்கு பயணிப்பதாக நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளது.

அதன் பிரகாரம் திடீர் சுற்றிவளைப்பு மேற்கொண்ட பொலிஸார், சந்தேகத்துகிடமான காரை நிறுத்தி சோதனையிட்டனர். அதில் பயணித்த இருவரையும் விசாரணைக்கு உட்படுத்தினர்.

அப்போது போலியாக தயாரிக்கப்பட்ட வாகன பதிவு சான்றிதழ்-03, வருமான வரி ஆவணம்-03, காப்புறுதி சான்றிதழ்-03, நிதி நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட தவணைக்கட்டணம் கட்டி முடிக்கப்பட்டமைக்கான ஆவணம்-03, வாகனத்தை ஒப்படைப்பதற்கு எவ்விதமான எதிர்ப்பு இல்லையென அத்தாட்சிப்படுத்தப்பட்ட ஆவணங்கள் -03, வாகன இலக்க தகடு இல்லையென பொலிஸில் செய்யப்பட்ட முறைப்பாடு தொடர்பிலான 3 பிரதிகள், தேசிய அடையாள அட்டைகள்-03, தற்காலிக வாகன அத்தாட்சிப் பத்திரம் ஆகியனவும் வாகனத்தில் இருந்து கைப்பற்றப்பட்டன.

கைது செய்யப்பட்டவர்களில் 27 வயதான இளைஞன், நாகுளுகமுவ பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்றும், 21 வயதான யுவதி, ஹிகுராங்கொடை பிரதேசத்தை சேர்ந்தவர் என்பதும் விசாரணைகளின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது.

இவ்விருவர் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில், முச்சக்கரவண்டி பதிவு புத்தகத்தை தயாரித்து தருவதாக கூறி பேராதனை பொலிஸ் பிரிவில் வசிக்கும் நபர் ஒருவரிடமிருந்து ஒரு இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் மோசடி செய்துள்ளமை கண்டுப்பிடிக்கப்பட்டுள்ளது. (அ)

# ஐக்கிய மக்கள் சக்தியில் பலர் ஜனாதிபதியோடு இணைவர்!

## கூறுகிறார் ஹரிசன் எம்.பி.

கொழும்பு, ஒக. 29

அடுத்த மாதம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு பல ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் ஆதரவு வழங்கவுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

குருநாகலில் நடைபெற்ற பேரணியில் உரையாற்றிய ஐக்கிய மக்கள் சக்தியின் முன்னாள் உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான பீ ஹரிசன், எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 10ஆம் திகதி நடைபெறவுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் 76ஆவது ஆண்டு விழாவின்போது சில பாராளுமன்ற உறுப்பினர்கள் மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொள்வார்கள் என எதிர்பார்ப்பதாகவும் கூறினார்.

கடந்த ஆண்டு பாராளுமன்ற வாக்கெடுப்பின்போது ஐக்கிய தேசியக் கட்சி ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக தெரிவு செய்ய பல ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர்களும் வாக்களித்தனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அதன் அங்கத்தவர்கள் பலர் மீண்டும் கட்சியில் இணைவதற்கு ஆர்வமாக உள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தி தலைவர் கூட அறிந்திருப்பதாகவும் அது செப்ரெம்பர் 10 ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் எனவும் ஹரிசன் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் மாநாட்டை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 10ஆம் திகதி லேக்ஹவுஸ் கட்டடத்திற்கு முன்பாக நடத்தவுள்ளதாக கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தேயிலை, இறப்பர் தோட்டங்கள் கடுமையான வறட்சியால் பாதிப்பு

கொழும்பு, ஒக. 29

நிலவும் வறட்சியான கால நிலை காரணமாக நாட்டின் பல பிரதேசங்களில், தேயிலை மற்றும் இறப்பர் தோட்டங்கள் பாரியளவு பாதிக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில், இரத்தினபுரி மாவட்டத்தில் இறப்பர் தோட்டங்களில் வேலை செய்யும் தொழிலாளர்கள் தமது வாழ்வாதாரத்தைக் கொண்டு செல்வதில் பாரிய இன்னல்களை எதிர்நோக்குகின்றனர்.

வறட்சி காரணமாக குறித்த பகுதிகளில் உள்ள இறப்பர் தோட்டங்களில் இருந்து பெறப்படும் பாலின் அளவு குறைந்துள்ளதுடன் தமக்கான வருமானம் வெகுவாக வீழ்ச்சி அடைந்துள்ளதாக இறப்பர் தொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, தேயிலைத் தோட்டங்களும் பாரியளவில் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இதன் காரணமாக தேயிலை தோட்டங்களில் விளைச்சல் வீழ்சியடைந்துள்ளதாக பெருந்தோட்ட தொழிலாளர்கள் சுட்டிக்காட்டுக்கின்றனர்.

அத்துடன், உள்நாட்டு பால் உற்பத்தியும் பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் குறிப்பிடுகின்றனர். இதேவேளை, நெற்செய்கை உள்ளிட்ட பல பயிர்ச்செய்கைகள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் பயிர்ச்செய்கையாளர்கள் தெரிவிக்கின்றனர். (அ)

# மன அழுத்தம் காரணமாக மாரடைப்பு ஏற்படும் நிலை

கொழும்பு, ஒக. 29

புகைபிடித்தல், உணவுப்பழக்கம், உடற்பயிற்சியின்மை மற்றும் மனஅழுத்தம் ஆகியனவே இதயநோய்களுக்கு பிரதான காரணமாக அமைவதாக களுத்துறை பொது வைத்தியசாலையின் இருதயநோய் நிபுணரான வைத்தியர் பத்திய ரணசிங்க தெரிவித்தார்.

மன அழுத்தம் காரணமாக பாடசாலை செல்லும் மாணவர்களுக்குகூட மாரடைப்பு ஏற்படும் அபாயம் உள்ளது என அவர் குறிப்பிட்டார்.

உடல் ஆரோக்கியம் மற்றும் மன ஆரோக்கியம் ஆகியவற்றில் அதிக கவனம் செலுத்துவதன் மூலம் சிறுவயதிலேயே மாரடைப்புக்கு முகங்கொடுக்கும் அபாயத்தை தவிர்க்க முடியும் என களுத்துறை பொது வைத்தியசாலையின் இருதயநோய் நிபுணர் வைத்தியர் பத்திய ரணசிங்க மேலும் கூறினார். (அ)

# ஆட்சியை தக்கவைக்க சிலர் இனவாத நாடகம்

## சஜித் பிரேமதாஸ சுட்டிக்காட்டு



**கொழும்பு, ஓக. 29**

**ஆட்சியை பிடிப்பதற்காக 2019 இல் அரங்கேற்றிய 'இன வாத' நாடகத்தின் 2ஆவது பாகத்தை தற்போது அரங்கேற்று வதற்கு முயற்சி எடுக்கப்பட்டுவருகின்றது. இவ்வாறானவர்க ளுக்கு மக்கள் தக்க பாடம் புகட்ட வேண்டும் என்று எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

13 என்கின்றனர், 13 பிளஸ் என்கின்றனர். இவை யாவும் போலியான வாக்குறுதிகளா கவே உள்ளன. ஜனாதிபதி கன வில் உள்ள சிலர், தமது பதவி களை தக்கவைத்துக்கொள்ள வும், சுகபோக வாழ்வுக்காகவும் மக்களை ஏமாற்றுவதற்கு முற்ப டுகின்றனர்.

2019 இல் மக்களை எவ்வாறு ஏமாற்றி ஆட்சியை பிடித்தார் களோ அதன் 2ஆம் பாகத்தை அரங்கேற்றி வருகின்றனர். இன வாத ரீதியிலான பிரசாரங்கள் இதன் ஓர் அங்கமாகும்.

இனவாதம், மதவாதம் பரப்பி ஆட்சியை பிடித்தவர்களை மக் கள் விரட்டியடித்தனர் என் பதை நினைவில் வைத்து செயற் பட்டால் சிறந்தது-என்றார்.

(அ)

# விலங்கு வேட்டைக்காக காத்திருந்த 13 பேர் கைது!

*கொழும்பு, ஓக. 29*

*வில்பத்து வனப் பூங்கா மற் றும் தப்போவ சரணாலயத்தில் வேட்டையாடுவதற்காக பல நாட்களாக முகாமிட்டிருந்த குழுவில் 13 பேர் கைது செய்யப் பட்டுள்ளனர். அவர்களிடமி ருந்து துப்பாக்கிகள், மோட் டார் சைக்கிள்கள் மற்றும் கத்தி களும் கைப்பற்றப்பட்டன.*

வனாத்தவில்லு மற்றும் கரு வலகஸ்வெவ வனஜீவராசிகள் அலுவலகங்கள் இணைந்து நடத்திய நடவடிக்கையில் இவர் கள் கைது செய்யப்பட்டனர்.

புத்தளம், வனாத்தவில்லு உள்ளிட்ட பல பகுதிகளில் இருந்து சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், இவர்கள் 35, 40, 45, 50, 60, 67 வயதுடையவர்கள் என வனவி லங்கு அதிகாரிகள் தெரிவித்த னர்.

வறட்சி காரணமாக வில்பத்து தேசிய வனப் பூங்காவுக்கும் தப் போவ சரணாலயத்திற்கும் நடு வில் அமைந்துள்ள கலா ஓயா விற்கு நீர் தேடி வரும் வன விலங் குகளை வேட்டையாடுவதற்காக பல நாட்களாக முகாமிட்டிருந்த கும்பல் ஒன்றே கைது செய்யப் பட்டுள்ளது.

இடியன் துப்பாக்கி மற்றும் 12 போர் துப்பாக்கி, கத்திகள், மின் விளக்குகள், வெடிமருந்து கள், 7 மோட்டார் சைக்கிள்கள், கூடாரங்கள், சந்தேக நபர்களுக்கு சொந்தமான செல்போன்கள் மற்றும் பிற பொருட்கள் இந்த சோதனையில் கைப்பற்றப்பட் டன.

இந்தச் சுற்றிவளைப்பின் போது மேலும் 8 சந்தேகநபர் கள் தப்பிச் சென்றுள்ளதாகவும், சந்தேகநபர்களை கைது செய்வ தற்கு வனவிலங்கு குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# படுக்கையில் தீயில் கருகிய நிலையில் சடலமாக மீட்கப்பட்ட மாற்றுத்திறனாளி!

கொழும்பு, ஓக. 29

வீடொன்றில் கட்டிலில் தீயில் சிக்கி ஊனமுற்ற ஒருவர் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட் டுள்ளதாக ஹலவத்தை பொலி ஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் மல்வத்தை, ஹலவத்தை, இலிப்பாதெனிய பகுதியைச் சேர்ந்த 49 வயது டைய நபரே உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் கடந்த 2 வரு டங்களுக்கு முன்னர் அங்கவீன மடைந்து ள்ளதாகவும், அதன் பின்னர் தனது மனைவி மற்றும் இரண்டு பிள்ளைகளை விட்டு விட்டு மூத்த சகோதரியுடன் வாழ்ந்து வருவதாகவும் தெரி விக்கப்படுகின்றது.

சகோதரி சில தேவைகளுக் காக வீட்டை விட்டு வெளியே சென்றிருந்த வேளையில் இந்த தீ விபத்து ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ள னர்.

அவர் இருந்த படுக்கையில் தீப்பிடித்த காரணத்தால் இந்த மரணம் நிகழ்ந்திருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

தீ விபத்துக்கான காரணம் மின் கசிவா அல்லது வேறு ஏதே னும் காரணமா என்பது இது வரை தெரியவில்லை.

சம்பவம் தொடர்பான மேல திக விசாரணைகளை ஹலவத்தை பொலிஸார் மேற்கொண்டுள்ள னர்.

(அ)

# எனது சகோதரனின் விண்வெளி முயற்சி தனியார் முதலீடு; கேள்வி கேட்க முடியாது

## நாமல் ராஜபக்ஷ எம். பி.



கொழும்பு, ஓக. 29

எனது சகோதரர் அனுப்பிய ஏவூர்தி (றொக்கெட்) தனியா ரின் முதலீடு. அதனை கேள் விக்கு உட்படுத்த முடியாது என்று கூறியிருக்கிறார் சிறீ லங்கா பொதுஜன பெரமுன வின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ.

பொதுஜன பெரமுன நடத் திய செய்தியாளர் சந்திப்பி லேயே அவர் இதனைத் தெரி வித்தார்.

இந்தியாவின் விண்கலத்தை தனது சகோதரர் அனுப்பிய ஏவூர்தியுடன் தொடர்புபடுத்தி சிலர் கருத்து தெரிவிக்கின்றனர். பாராளுமன்றத்திலும் இது குறித்து கேள்வி எழுப்பப்பட் டது.

எனது சகோதரர் தனியார் துறை முயற்சியாகவே ஏவூர் தியை அனுப்பினார். அதில் அரசாங்கம் தொடர்புபட்டிருந் தால் மாத்திரமே அது குறித்து கோப் குழுவினர் விசாரணை செய்யவேண்டும்.

தனியார் வர்த்தகர் ஒருவரின் முதலீடு குறித்து நாங்கள் கேள்வி எழுப்ப முடியாது. அதில் அரசாங்கத்துக்கு தொடர்பிருந்தால் மாத்திரம் எதிர்கட்சி தலைவர் பாராளு மன்ற விசாரணையை கோர முடியும்.

சேற்றை வாரிவீசும்அரசியல் சூழலை அடிப்படையாக கொண்டவை இந்த கருத்துகள். இவ்வாறான கருத்துகளால் நாட்டை அபிவிருத்தி செய்ய முடியாது - என்றும் அவர் கூறினார்.

# இரண்டாவது சுதந்திர போராட்டத்துக்கு தமிழ் மக்களின் முழு ஆதரவு அவசியம்!

## எல்லே குணவங்ச தேரர் அழைப்பு

*கொழும்பு, ஓக. 29*

வடக்கு, கிழக்கு மட்டுமல்ல முழு இலங்கையும் தமது தாய கம்தான் எனக்கருதி இரண்டா வது சுதந்திர போராட்டத்துக்கு தமிழ் மக்கள் முழுமையான ஆதரவை வழங்க வேண்டும் என்று அறைகூவல் விடுத்துள் ளார் தேசத்தை பாதுகாக்கும் தேசிய அமைப்பின் தலைவர் எல்லே குணவங்ச தேரர்.

நாட்டு வளங்களை பாதுகாப் பதற்கான போராட்டமே 2ஆவது சுதந்திர போராட்டம் எனவும் அவர் கூறினார்.

இது தொடர்பில் தேரர் மேலும் கூறியவை வருமாறு-

வடக்கு, கிழக்கு தமது தாய கம் என தமிழ் மக்கள் கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக கூறிவ ருகின்றனர். ஏன் இரு பகுதிகளை மட்டும் தாயகமாக கருத வேண் டும்? முழு நாடும் எமது என கூறுங்கள், அதற்கு நாம் எதிர்ப்பு இல்லை. நாம் அனைவரும் இலங்கையர்கள்.

யாழ். நாகதீப எமது பகுதி



என நாம் உரிமை கோரவில் லையா? அதுபோல தமிழ் மக்க ளும் முழு இலங்கையும் தமக் கானது என எண்ணவேண்டும்.

இன்று எமது நாட்டு வளங் கள் சுரண்டப்படுகின்றன. தேசிய சொத்துகள் விற்கப்படுகின்றன. சொந்த நாட்டிலேயே வாடகைக் காரர்கள்போல் வாழவேண்டிய நிலை எமக்கு. இந்நிலைமை மாற வேண்டும், இந்நாடு எமது சொத்து, அதற்கு நாம் சொந்தக் காரர்கள் என்ற எண்ணம் நாட்டு மக்களுக்கு வரவேண்டும். அப் போதுதான் எமது மரபுரிமை களைக் காக்கலாம். வளங்களை காப்பதற்கான 2ஆவது சுதந்திர போராட்டத்துக்கு அனைத்து இன மக்களும் ஆதரவு வழங்க வேண்டும், ஒன்றிணைய வேண் டும். எமது அனைத்து தலைவர் களும் இணைந்துதான் சுதந்தி ரத்தை பெற்றனர் என்பதை மறந்துவிடக்கூடாது.

தொல்பொருள் என்பது ஒரு இனத்துக்குரியது அல்ல. ஒரு பழமையான ஆலயம் இருந்தால் அதனையும் அனைவரும் பாது காக்க வேண்டும். வடக்கு, கிழக் கில் உள்ள தொல்பொருட்களை பாதுகாக்குமாறு தமிழ் மக்களி டம் நாம் கேட்டுக்கொள்கின் றோம். கடந்த 75 ஆண்டுகளாக தமிழரோ, சிங்களவர்களோ வெற்றிபெறவில்லை. மாறாக வெட்டிக்கொண்டோம். வடக்கு, கிழக்கில் உள்ள பௌத்த ஸ்தா னங்களில் தேவையற்ற பிரச்னை களை ஏற்படுத்த வேண்டாம் என கேட்டுக்கொள்கின்றேன். வடக்கிலும், தெற்கிலும் உள்ள அரசியல்வாதிகளின் சூழ்ச்சிக் குள் சிக்கிவிட வேண்டாம் என வும் வேண்டுகோள் விடுக்கின் றேன்-என்றார்.

(அ)

# 14 தங்கப் பாளங்களுடன் ஒருவர் விமான நிலையத்தில் சிக்கினார்

*கொழும்பு, ஓக. 29*

*தாய்லாந்திலிருந்து, இலங் கைக்கு கொண்டுவர முயன்ற 27 மில்லியன் ரூபா பெறுமதியான 14 தங்கப் பாளங்களுடன், ஒரு வர் கட்டுநாயக்க விமான நிலை யத்தின் சுங்க திணைக்கள அதி காரிகளினால் கைது செய்யப் பட்டுள்ளார்.*

தாய்லாந்திலிருந்து, நாட் டுக்கு வந்த குறித்த பயணியிடம் ஒரு கிலோ 314 கிராம் தங்கம் கைப்பற்றப்பட்டுள்ளது.

இதனையடுத்து கைது செய் யப்பட்ட குறித்த நபர் நீர்கொ ழும்பு நீதவான் முன்னிலையில் பிரசன்னப்படுத்தப்பட்டதை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இலங்கையில் தங்கத்தை இறக்குமதி செய்வதற்கு உரிமம் அவசியமாகும்.

அவ்வாறு தங்க இறக்கும தியை இலங்கை மத்திய வங்கி யால் அங்கீகரிக்கப்பட்ட நிறு வனங்களால் மாத்திரமே முன் னெடுக்க முடியும்.

இந்நிலையில், குறித்த பயணி உரிய இறக்குமதி அனு மதிப்பத்திரம் இன்றி தங்கத்தை நாட்டுக்கு கொண்டுவந்துள் ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# மாத்தறையில் பொலிஸ் அலுவலர் துப்பாக்கியால் சுட்டு உயிர் மாய்ப்பு

*கொழும்பு, ஓக. 29*

மாத்தறை மாவட்ட நீதிமன் றில் கடமையாற்றி வந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் தன் னைத்தானே துப்பாக்கியால் சுட்டு உயிரை மாய்த்துக்கொண் டார்.

நேற்றுக் காலை அவர் தமது உத்தியோகபூர்வ துப்பாக்கியால் சுட்டு உயிரை மாய்த்துக் கொண் டதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

உயிரிழந்தவர் மாத்தறை - கெகுணுதுர பகுதியைச் சேர்ந்த 55 வயதுடைய பொலிஸ் உத்தி யோகத்தர் ஒருவரென தெரிய வந்துள்ளது.

அவர் உயிரை மாய்த்துக் கொண்டமைக்கான காரணம் தெரியவரவில்லை.

இந்நிலையில், சம்பவம் தொடர்பான மேலதிக விசார ணைகளை மாத்தறை பொலிஸா ர் முன்னெடுத்துள்ளனர். (அ)

# இனவாதிகளின் பிரித்தாளும் சூழ்ச்சிக்குள் சிக்கவேண்டாம்

## மக்களிடம் அநுரகுமார கோரிக்கை

**கொழும்பு, ஓக. 29**

**“மக்கள் மத்தியில் இனவாதத்தை விதைத்து பிரித்தாளும் சூழ்ச்சிமூலம் ஆட்சியை தக்கவைப்பதற்கும், பிடிப்பதற்கும் முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. குருந்தூர் மலை விவகாரம், கஜேந்திரகுமார் எம்.பியின் வீடு சுற்றிவளைப்பு என்பன இவற்றின் அங்கங்களாகும். இந்த பிரித்தாளும் சூழ்ச்சிக்குள் மக்கள் சிக்ககூடாது.” - என்று தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.**

தேசிய மக்கள் சக்தியின் பொரளை தொகுதி கூட்டத்தில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

2005 இல் ரணிலும், மஹிந்தவும் அரசியல் எதிரிகள் என்றனர். 2010 இலும் இருவருக்கிடையிலும் போட்டி என்றனர். 2015 இலும் இரு அணிகளாகவே போட்டியிட்டனர். 2019 இல் இரு அணிகளில் இருந்தனர். ஆனால் 2023 இல் இணைந்து ஆட்சி அமைந்துள்ளனர். இதுதான் இவர்களுக்கிடையிலான அரசியல் டீல். பிளவுபட்டிருப்பதுபோல் காட்டிக்கொள்வார்கள், எனினும், உள்ளுக்குள் இணக்கம் இருக்கும்.



2005 இல் போரை முடிப்பது யார் என்றும், 2010 இல் போரை முடித்தது யார் என்றும் பிரசாரம் இடம்பெற்றது, 2015 ஜனாதிபதித் தேர்தலில் சர்வாதிகாரமா, ஜனநாயகமா என பிரசாரம் இடம்பெற்றது, 2019 இல் தேசிய பாதுகாப்பு பற்றி பேசப்பட்டது. இதன்மூலம் ஏனைய அனைத்து பிரச்னைகளும் மூடிமறைக்கப்பட்டன.

மக்கள் இன்று உண்மையை உணர்ந்துள்ளனர். நாட்டில் இரு பிரதான முகாம்கள்தான் உள்ளன. ஒன்று தேசிய மக்கள் சக்தி, அது மக்கள் ஆட்சிக்கான சக்தி. மற்றைய முகாம் ஊழல், மோசடிகளில் ஈடுபடும் அணி. எனவே, தேசிய மக்கள் சக்தி ஆட்சி அமைந்தால்தான் நாடு முன்னேறும்.

இன்று இனவாதத்தை தூண்டுகின்றனர். பொன்னம்பலம் எம்.பியின் வீடு சுற்றிவளைக்கப்படுகின்றது. குருந்தூர் மலை பிரச்னை வருகின்றது. இவற்றை தோற்கடிக்கவேண்டும். அனைத்து இன மக்களும் சம உரிமை அனுபவிக்கும் வகையில் அமைதியான நாட்டை உருவாக்குவதே எமது எதிர்பார்ப்பு-என்றார்.

(அ)

# பாடசாலையை பூட்ட வைத்த நாய் உண்ணி

கொழும்பு, ஓக. 29

நாய் உண்ணி காரணமாக காலியில் உள்ள பலப்பிட்டி ரேவத தேசிய பாடசாலையின் ஆரம்பப் பிரிவு நேற்றும் இன்றும் மூடப்பட்டுள்ளது.

பாடசாலை முழுவதும் நாய் உண்ணி மற்றும் கண்ணுக்குத் தெரியாத உண்ணிகளும் இருப்பதாக பாடசாலையின் அதிபர் தாமரா குமாரி குறிப்பிட்டார்.

இது தொடர்பில் பொது சுகாதார பரிசோதகர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், அவற்றை அழிப்பதற்கான நடவடிக்கை தற்போது முன்னெடுக்கப்பட் டுள்ளதாகவும் அதிபர் கூறினார்.

மருத்துவரின் அறிவுரைக்கு அமைய மருந்துகளை பயன்படுத்தி உண்ணிகளை அழிக்கும் நடவடிக்கைள் முன்னெடுக்கப்பட்டுள்ளதால் மாணவர்களின் பாதுகாப்பு கருதி இரண்டு நாட்களுக்கு பாடசாலை மூடப்படுவதாக அதிபர் மேலும் தெரிவித்தார்.

(அ)

# தம்மையே அறியாமல் ‘டிமென்ரியா’ நோயால் பாதிக்கப்பட்டுள்ள 4 வீதமான இலங்கையர்!

கொழும்பு, ஓக. 29

இலங்கையின் சனத்தொகையில் 4 வீதமானவர்கள் நினைவு இழப்பு எனப்படும் டிமென்ரியா நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாக மனநல வைத்திய நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

வயோதிபத்துடன் மூளை செல்கள் அழிவதால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாக மனநல வைத்திய நிபுணர் என் குமாநாயக்க குறிப்பிட்டார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைக் கூறினார்.

முறையான உணவுப் பழக்க வழக்கங்களை கடைப்பிடிப்பதன் மூலமும், தொடர்ந்து உடற்பயிற்சிகளை மேற்கொள்வதன் மூலமும், நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம் போன்ற நோய்களை கட்டுப்படுத்துவதன் மூலமும் இந்த நிலைமையை குறைக்க முடியும் என மனநல வைத்திய நிபுணர் என் குமாநாயக்க தெரிவித்தார்.

(அ)

# இலங்கையில் பிரமிட் திட்டத்தில் பணத்தை சுருட்டிய சீனக் கும்பல்?

கொழும்பு, ஓக. 29

பொரளை லேக் டிரைவ் வீதியில் அமைந்துள்ள தனது வீட்டுக்குள் சிலர் புகுந்து, தம்மை கட்டி வைத்து கொள்ளையடித்ததாக சீனப் பிரஜை ஒருவரின் முறைப்பாடு போலியானது என கொழும்பு தெற்கு பிரிவு குற்றப் புலனாய்வுப் பணியகம் தெரிவித்துள்ளது.

கொழும்பு துறைமுக நகரத்தில் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாக கூறிய 38 வயதான சீன வர்த்தகர், பிரமிட் மோசடிகள் மூலம் 40 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான பணம் மற்றும் சொத்துக்களை கொள்ளையிட்டுள்ளார்.

முறைப்பாட்டாளர், அவரது நண்பர் என சீன இரண்டு சீன பிரஜைகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த சீன பிரஜை, ஏனைய சீனப் பிரஜைகள் குழுவுடன் இணைந்து இந்த நாட்டில் பிரமிட் திட்டத்தை மேற்கொண்டு வருவதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கசினோ சூதாட்டத்தில் ஈடுபட்டு பணத்தை இழந்ததை மறைப்பதற்காக இந்த சீன நபரே திட்டமிட்டு கொள்ளை நாடகத்தை அரங்கேற்றியதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

20ஆம் திகதி அவர் பொலிஸில் முறையிட்டிருந்தார். தனது 40 கோடி ரூபாய் மதிப்புள்ள சொத்துகளை கொள்ளையடித்துள்ளனர் என அதில் குறிப்பிட்டனர்.

கடந்த 19ஆம் திகதி வியாபார நிமித்தம் சென்று விட்டு நள்ளிரவில் வீடு திரும்பியதாக இந்த சீன பிரஜை பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார். புகாரின் படி, அவர் தனது மொழிபெயர்ப்பாளருடன் ஊதா நிற கே.டி.எச் வாகனத்தில் வீட்டுக்கு வந்துள்ளார். வாகனத்தின் உரிமையாளரே தனது மொழிபெயர்ப்பாளர் மற்றும் சாரதி என சீன நபர் பொலிஸாரிடம் தெரிவித்தார்.

மொழிபெயர்ப்பாளருடன் வீட்டுக்குள் நுழைந்தபோது, வீட்டிற்குள் இருந்த முகமூடி அணிந்த மூன்று நபர்கள் தம்மைத் தாக்கி, கழுத்தில் வாளை வைத்து, கைகளைக் கட்டியதாக சீன வர்த்தகர் பொலிஸாரிடம் தெரிவித்தார். தான் துப்பாக்கி முனையில் கட்டப்பட்டதாக மொழி பெயர்ப்பாளர் பொலிஸாரிடம் தெரிவித்தார்.

அப்போது ஒருவர் தனது மொபைல் போனை எடுத்து சோதனை செய்ததாக சீன தொழிலதிபர், பொலிஸாரிடம் கூறினார். தொலைபேசி பூட்டப்பட்டிருந்ததால் கொள்ளையர்கள் தம்மை அச்சுறுத்தியதாகவும், அதனைத் திறக்கும்போது, தனது நண்பர் ஒருவருக்கு குறுஞ் செய்தி அனுப்பி, தான் சிக்கலில் இருப்பதாக தெரிவித்ததாகவும் சீன பிரஜை பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

செய்தி அனுப்பிய சிறிது நேரத்திலேயே வீட்டின் மணி அடித்ததையடுத்து வீட்டில் தங்கியிருந்த கொள்ளையர்கள் பீதியடைந்து வீட்டை விட்டு ஓடிவிட்டதாக அவர் பொலீசாரிடம் தெரிவித்தார்.

மூன்று கொள்ளையர்களும் வீட்டின் முன்பக்கக் கதவைத் திறந்து தப்பிச் சென்றுள்ளதாகவும், அதே நேரத்தில் சீனப் பிரஜையின் நண்பர்களும் வீட்டிற்குள் நுழைந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர். இது வழக்கத்திற்கு மாறான சம்பவம் என்பதால் இது குறித்து முதல் சந்தேகம் எழுந்ததாக மூத்த போலீஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இரண்டு நண்பர்கள் வீட்டிற்கு வந்ததாகவும், அவர்கள் தனது மற்றும் மொழிபெயர்ப்பாளரின் கைகளை அவிழ்த்ததாகவும் சீன நாட்டவர் பொலிஸாரிடம் கூறினார். வீட்டைச் சோதனையிட்டபோது, கொள்ளையர்கள் தமது வாகனத்தில் தப்பிச் சென்றதையும், சமையல்காரர் கை, வாய் கட்டப்பட்டு வீட்டின் உள்பக்கமாக அடைக்கப்பட்டிருந்ததையும் கண்டதாக கூறியுள்ளார்.

23.8 மில்லியனுக்கும் அதிகமான பெறுமதியான அமெரிக்க டொலர்கள், யுவான், தாய்லாந்து நாணயம், ஹொங்கொங் டொலர்கள், திர்ஹாம்கள் மற்றும் இலங்கை ரூபா என்பவற்றையும் கொள்ளையர்கள் எடுத்துச் சென்றுள்ளதாக சீன பிரஜை பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். அதுமட்டுமின்றி 11 கையடக்கத் தொலைபேசிகள், 7 மடிக்கணினிகள், ஐந்து வெளிநாட்டு மதுபான போத்தல்கள், அர்மானி கைக்கடிகாரம், பெறுமதியான இடுப்புப் பட்டை மற்றும் வாகனமட என்பன கொள்ளையிடப்பட்ட ஏனைய பொருட்களில் அடங்கும். அந்த சொத்துக்களின் மதிப்பு 17.7 மில்லியன் ரூபாய்.

கமரா அமைப்பு இருந்தாலும், பாதுகாப்பு கமரா காட்சிகளை சேமித்து வைத்திருக்கும் டி.வி.ஆரும் கொள்ளையர்களால் திருடப்பட்டுள்ளதாக சீன நாட்டவர் முறைபாடு அளித்துள்ளார்.

இந்த சீனப் பிரஜைகள் தங்கியிருந்த வீடு 70 மில்லியன் ரூபாய்க்கு வாடகைக்கு விடப்பட்டதாகவும் தெரியவந்துள்ளது. இந்த வீட்டில் இருந்தே இந்த மோசடி நடந்துள்ளது. பொலிஸார் அந்த வீட்டை சோதனையிட்டபோது, பிரமிட் திட்டத்தில் ஈடுபட்ட சீன பிரஜைகள் கும்பல் தப்பிச் சென்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சீன பிரஜைகள் ஒரு வருடத்திற்கும் மேலாக இந்த நாட்டில் தங்கியிருந்து இந்த சர்வதேச பிரமிட் திட்டத்தை ஒன்லைனில் நடத்தி வருவதாகவும் தெரியவந்துள்ளது. இதற்காக பயன்படுத்தப்பட்ட பல மடிக்கணினிகளையும் பொலிஸார் கண்டுபிடித்தனர். சோதனையின்போது, அங்கு தங்கியிருந்த சுமார் 15 சீன பிரஜைகள் தப்பிச் சென்றுள்ளனர். இந்த மோசடியில் பயன்படுத்தப்பட்ட சுமார் 40 மடிக்கணினிகளை அவர்கள் எடுத்துச் சென்றிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

விசாரணையில், வாகன சாரதியகவும் மொழிபெயர்ப்பாளராகவும் செயற்பட்ட நபருக்கு திட்டத்தை செயல்படுத்த ரூ.1.5 மில்லியன் வழங்கப்பட்டது தெரியவந்தது.

இந்த நபர் கொழும்பு துறைமுக நகரத்தில் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடவில்லை என விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சீன பிரஜையுடன் பிரமிட் திட்டத்தில் ஈடுபட்ட சந்தேகநபர்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சீனப் பிரஜைகள் இலங்கைக்கு சட்டவிரோதமான முறையில் சிகரெட் கடத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது. அவர்களிடம் இருந்து முப்பதாயிரம் சிகரெட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டன.

கொழும்பில் உள்ள சொகுசு அடுக்குமாடி குடியிருப்புகளில் ஏழு வீடுகளையும் இந்த கொள்ளையர்கள் வாங்கியுள்ளதாக தெரியவந்துள்ளது.

(அ)

# அத்துமீறல்களை கட்டுப்படுத்துவதற்காக மயிலத்தமடுவில் நிரந்தர பொலிஸ் சாவடி!

## பொலிஸ்மா அதிபருடன் பிள்ளையான் சந்திப்பு

மட்டக்களப்பு, ஓக. 29

**மட்டக்களப்பு மாவட்டத்தில் மயிலத்த மடு, மாதவனை போன்ற பிரதேசங்களில் தொடர்ச்சியாக ஏற்படுகின்ற அத்துமீறல்கள் அதனுடன் தொடர்புபட்ட பிணக்குகள் போன்றவற்றினை சரி செய்யும் முகமாக குறித்த பிரதேசத்தில் நிரந்தரமான பொலிஸ் சோதனைச் சாவடியினை மிக விரைவில் அமைப்பது தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது.**



பொலிஸ்மா அதிபர் சி.டி. விக்கிரமரத்ன மற்றும் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண ஆகியோரை கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரும் மாவட்ட அபிவிருத்தி குழுத் தலைவருமான சிவ. சந்திரகாந்தன் (பிள்ளையான்) சந்தித்து கலந்துரையாடியிருந்தார்.

இதன்போதே மேற்படி விவகாரம் தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது. அத்துடன் இணைந்ததாக மாவட்டத்தின் பல பகுதிகளிலும் இடம்பெறக்கூடிய சட்டவிரோத மதுபான உற்பத்தி, போதைப்பொருள் கடத்தல், விற்பனை அவற்றுடன் தொடர்புபட்ட குற்றச்செயல்கள் போன்றவற்றை தடுப்பது தொடர்பிலும் விரிவாக ஆராயப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவித்த பொலிஸ் மா அதிபர், தமிழர்கள் பொலிஸ் சேவையில் இணைவது குறைவாக இருப்பதாகவும், அவர்கள் தங்களது சமூகத்திற்கு சேவையாற்றும் வண்ணமாக பொலிஸ் சேவையில் இணைந்து பணியாற்ற வேண்டுமெனவும் அதனை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறும் இராஜாங்க அமைச்சரிடம் கோரிக்கை விடுத்திருந்தார். (அ)

# பல்துறை சார்ந்த பெண்களுக்கு கௌரவம்!



திருமலை, ஓக. 29

திருகோணமலை மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பல்துறை சார்ந்த 160 பெண்களை பாராட்டி கௌரவிக்கும் விழா திருகோணமலை நகரசபை மண்டபத்தில் இடம்பெற்றது.

இவ்விழாவில் கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எச்.ஈ.எம்.டபிள்யூ. ஜீ.திசாநாயக்கா பிரதம அத்தியாக கலந்து கொண்டு சிறப்பித்தார்.

சமூகசேவை, கல்வி, மருத்துவம், விளையாட்டு, சுற்றுலாத்துறை, அழகியல்துறை, கலை, கலாசாரம், அரச மற்றும் அரச சார்பற்ற தொழிற்துறை சார்ந்த பல்வேறுபட்ட பெண்கள் இவ்விழாவின்போது பாராட்டப்பட்டு கௌரவிக்கப்பட்டனர். (அ)

# ரஜரட்டை பல்கலை நீச்சல் தடாகத்தில் மூழ்கி மட்டக்களப்பு மாணவன் மரணம்!

கொழும்பு, ஓக. 29

ரஜரட்டை பல்கலைக்கழகத்தின் நீச்சல் தடாகத்தில் நீராடச் சென்ற பல்கலைக்கழக மாணவர் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார் என மிஹிந்தலை பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு, கொக்குவில் பிரதேசத்தைச் சேர்ந்த முருகதாஸ் திலக்ஷன் என்ற 21 வயதுடைய மாணவனே துரதிஷ்டவசமாக உயிரிழந்துள்ளார்.

ரஜரட்டை பல்கலைக்கழக முகாமைத்துவபீடத்தில் முதலாம் ஆண்டில் கல்வி கற்கும் இந்த மாணவன், பல்கலைக்கழகத்தின் ஏனைய மாணவர்கள் குழுவுடன் நேற்று முன் தினம் மாலை 5 மணியளவில் பல்கலைக்கழக நீச்சல் தடாகத்தில் நீராடச் சென்றதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# இராணுவத்தால் வீடு கையளிப்பு

மட்டக்களப்பு, ஓக. 29

தீ அனர்த்தத்துக்குள்ளாகி தமது குடியிருப்பு வீட்டை இழந்து நிர்க்கதியாகியுள்ளகியிருந்த பெண் இராணுவ சிப்பாய் ஒருவரின் குடும்பத்துக்கு அக்கரைப்பற்று இராணுவப்படையின் 241ஆம் படைப்பிரிவினர் சகல வசதிகளையும் கொண்ட வீடு ஒன்றை ஆலையடிவேம்பில் நிர்மாணித்துக் கொடுத்துள்ளனர்

பெண் இராணுவ சிப்பாயான தவசீலன் டிரோனா இராணுவப் படை இருபத்தினான்காவது பிரிவின் மூன்றாவது காலாட் படைப் பிரிவில் தற்போது பணியாற்றி வருகின்றார். ஆலையடி வேம்பில் இருந்த அவரின் வீடு 2016 ஆண்டு சடுதியாக ஏற்பட்ட தீ அனர்தம் காரணமாக முற்றாகவே தரைமட்டமானதால் அவரோடு வாழ்ந்து வந்த அவரின் பெற்றோர்கள் மிகவும் இன்னல்களுக்கு மத்தியில் ஒரு



தற்காலிக கொட்டகையில் வாழ்ந்து வந்தனர்.

இலங்கை இராணுவப்படை இருபத்தினான்காவது காலாட் படைப்பிரிவின் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் விபுல சந்திரசிறியின் வழிகாட்டலில் 241ஆம் படைப்பிரிவினரின் பூரண பங்களிப்புடன் நிர்மாணிக்கப்பட்ட இந்த வீட்டின் இதர தேவைகளை முஸ்லிம், தமிழ் வர்த்தக பிரமுகர்களும் மற்றும் சிவில் அமைப்புகளின் பிரதி நிதிகளும் நிவர்த்தி செய்துள்ளனர். (அ)

# திருகோணமலையில் பிக்குகள் ஆர்ப்பாட்டம்



திருமலை, ஓக. 29

திருகோணமலை இலுப்பைக்குளம் பகுதியில் அமைக்கப்பட்ட பொரலுகந்த ரஜமகா விகாரைக்கு தடை விதித்தமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து பௌத்த பிக்குகள் மற்றும் சில பொது மக்கள் காலை தொடக்கம் மதியம்வரை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டம் திருகோணமலை மாவட்ட செயலகத்திற்கு முன்னால் ஏ-6 பிரதான வீதியை வழிமறித்து கிழக்கு ஆளுநருக்கு எதிரான கோசங்களை எழுப்பியவாறும், பதாதைகளை ஏந்தியவாறும் இடம்பெற்றது.

மாவட்ட செயலகத்தில் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் நேற்று இடம்பெற்றவேளையில் இது தொடர்பாகவும் பேசப்பட்டது. (அ)

# பாலமுனை பாடசாலையில் மர நடுகை



மட்டக்களப்பு, ஓக. 29

“சுற்றுப்புறச் சூழலை அழகுபடுத்துவோம்” எனும் தொனிப்பொருளில் பாலமுனை மின்ஹாஜ் மாஹா வித்தியாலயத்தில் மர நடுகை நேற்று திங்கள்கிழமை இடம்பெற்றது.

அதிபர் கே.எல் உபைத்துல்லாஹ் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் அட்டாளைச்சேனை பிரதேச உதவி பிரதேச செயலாளர் நஜிஹா முஸாபீர் பிரதம அதிதியாக கலந்து கொண்டு சிறப்பித்தார்.

# வனஜீவராசிகள் திணைக்கள அலுவலர் மட்டக்களப்பில் யானை தாக்கி மரணம்

மட்டக்களப்பு, ஓக. 29

மட்டக்களப்பு, வெல்லாவெளி பகுதியில் காட்டு யானை தாக்கி வனஜீவராசிகள் திணைக்கள உத்தியோகத்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மட்டக்களப்பை வசிப்பிடமாகக் கொண்ட ஸ்ரீ தரன் என்பவரே உயிரிழந்துள்ளார்.

தாக்குதலுக்கு உள்ளானவர் களுவாஞ்சிக்குடி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார். (அ)

# வடகொரியா ஜனாதிபதி கிம் மீது கொலை முயற்சி

பியொங்யாங், ஓக. 29

**வடகொரிய ஜனாதிபதி கிம் ஜோங் உன்னைக் கொலை செய்யும் முயற்சி இடம்பெற்றுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.**



வடகொரியா ஜனாதிபதி கிம் ஜோங் உன் அமெரிக்கா, தென்கொரியா உள்ளிட்ட உலக நாடுகளின் எதிர்ப்பினையும் மீறி அவ்வப்போது அணு ஆயுத ஏவுகணைச் சோதனைகளில் ஈடுபட்டு வருகின்றார்.

இந்நிலையில், வடகொரியாவின் தலைநகரான பிலஒங்யாங் நகரில் சமீபத்தில் குண்டுவெடிப்புச் சம்பவமொன்று இடம்பெற்றுள்ளதாகவும், இது கிம்மை கொலை செய்யும் முயற்சியாக இருக்கலாம் எனவும் சந்தேகிக்கப்படுகின்றது.

இந்நிலையில் கிம்முக்கான பாதிப்பு பலப்பட்டுள்ளதாகவும் இதற்காக வெளிநாட்டில் இருந்து நவீன சாதனங்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

இதேவேளை தலைநகரில் அதுபோன்ற குண்டுவெடிப்பு சம்பவங்கள் எதுவும் நடந்தது போல் தெரியவில்லை எனவும் இது குறித்து கண்காணித்து வருவதாகவும் தென்கொரிய உளவு அமைப்புகள் தெரிவித்துள்ளன.

(அ)

# பாகிஸ்தானில் தொடர் போராட்டம்!



இஸ்லாமாபாத், ஓக. 29

பாகிஸ்தானில் மின் கட்டண உயர்வை கண்டித்து நாடு முழுவதும் பொதுமக்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை பாகிஸ்தானில் மின்சார கட்டணங்கள் கடந்த 15 மாதங்களில் நான்கு மடங்குக்கு மேல் அதிகரித்துள்ளதாக கூறப்படுகிறது.

தற்போது பாகிஸ்தானில் பெற்றோல், டீசல் விலை உயர்வை தொடர்ந்து மின்கட்டணமும் உயர்ந்துள்ளதால் அங்குள்ள மக்கள் தொடர் போராட்டங்களை முன்னெடுக்கின்றமையும் குறிப்பிடத்தக்கது.

(அ)

# பிரான்ஸ் அரச பாடசாலைகளில் மாணவிகள் அபாயா அணிய தடை



பாரிஸ், ஓக. 29

பிரான்ஸ் அரசினால் நடத்தப்படும் பாடசாலைகளில் மாணவிகள் அபாயா அணிவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு கல்வி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

புதிய கல்வி ஆண்டு எதிர்வரும் செப்ரெம்பர் 4 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில், இந்த சட்டம் மிக விரைவில் அமுல்படுத்தப்படவுள்ளது.

அரச பாடசாலைகளில் மற்றும் அரசாங்க கட்டடங்களில் மத அடையாளங்களுக்கு பிரான்ஸ் கடுமையான தடைகளை விதித்துள்ளது.

அவை மதசார்பற்ற சட்டங்களை மீறுவதாக அந்நாட்டு அரசாங்கம் வாதிட்டுள்ளது.

பல மாதங்களாக நடைபெற்று வந்த வாதப்பிரதிவாதங்களை அடுத்தே அபாயாவைத் தடை செய்யும் இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(அ)

# நேட்டோவுக்கு எதிராக ஜேர்மனியில் போராட்டம்

பேர்ளின், ஓக. 29

நேட்டோ அமைப்புக்கு எதிராக ஜேர்மனியில் பாரிய போராட்டமொன்று அந்நாட்டு மக்களால் முன்னெடுக்கப்பட்டது.

தனது சொந்த நலனுக்காக உலகம் முழுவதும் போர்களை நேட்டோ அமைப்பு நடத்தி வருவதாகவும், குறிப்பாக ரஷ்யாவுக்கும் உக்ரேனுக்கும் இடையே இடம்பெற்றுவரும் மோதலை நேட்டோ அமைப்பு தொடர்ந்து தூண்டிவிட்டுவருவதாகவும் தெரிவித்தே இப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.




இதன்போது "போர் வேண்டாம், அமைதியே வேண்டும், ஆயுதங்கள் அமைதியைத் தராது" போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியபடி போராட்டக்காரர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இப்பேரணியில் அமெரிக்கா மற்றும் பிற மேற்கத்திய நாடுகள் உக்ரேனுக்கு ஆயுதங்களை அனுப்பி அந்நாட்டுக்கு நெருக்கடியை ஏற்படுத்தி வருவதாகவும் அதனை உடனடியாக நிறுத்த வேண்டும் எனவும் வலியுறுத்தினர்.

மேலும் பொருளாதாரப் பாதிப்பு, பணவீக்கம் என அடுத்தடுத்து பல பிரச்சினைகளை ஜேர்மனி சந்தித்துவரும் நிலையில் உக்ரேனுக்கு ஜேர்மனி ஆயுத உதவி வழங்கி வருவதாகவும் போராட்டக்காரர்கள் குற்றம் சுமத்தினர்.

(அ)

# மணிப்பூரில் மீண்டும் பதற்றம் பாதுகாப்புப் படைகள் குவிப்பு



புதுடில்லி, ஓக. 29

மணிப்பூரின் தலைநகர் இம்பாலில் இரு பிரிவினரிடையே ஏற்பட்ட வன்முறையில் நேற்று முன் தினம் 5 வீடுகள் தீயிட்டு எரிக்கப்பட்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில் தீவைத்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி பெரும் திரளான மக்கள் அப்பகுதியில் குவிந்ததால் பதற்றமான சூழல் நிலவியுள்ளதாகவும், இதனையடுத்து அங்கு பாதுகாப்புப் படைகள் குவிந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே வேறொரு இடத்தில் வன்முறை கும்பல் பொலிஸாரைத் தாக்கி துப்பாக்கிகளைப் பறித்துச் சென்றுள்ளதாகவும், இதனையடுத்து துப்பாக்கிகளை மீட்கவும் வன்முறையாளர்களைக் கைது செய்யவும் பொலிஸார் தனிப்படைகளை அமைத்துத் தேடிவருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வாக்னர் குழு தலைவர் மரணம் மரபணு பரிசோதனையில் உறுதி

மொஸ்கோ, ஓக. 29

ரஷ்யாவின் கூலிப்படையான வாக்னர் குழுவின் தலைவர் யெவ்ஜெனி பிரிகோஜின் விமான விபத்தில் உயிரிழந்துள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

உக்ரைனுக்கு எதிரான போரில் ரஷ்ய ஜனாதிபதிக்கு ஆதரவாக வாக்னர் குழு போராடியிருந்த போதிலும், கடந்த ஜூன் மாதம் இரு தரப்பிற்கும் இடையில் விரிசல் ஏற்பட்டது.

நான்கு நாட்களுக்கு முன் ரஷ்யாவில் தனியார் விமானமொன்று மொஸ்கோ நகரிலிருந்து பயணித்த போது வீழ்ந்து விபத்திற்குள்ளானதில் 10 பேர் உயிரிழந்துள்ளனர்.

விபத்தில் உயிரிழந்தவர்களில் வாக்னர் கூலிப்படையின் தலைவர் யெவ்ஜெனி பிரிகோஜின் என்பவரும் அடங்குவதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டன .

தற்போது யெவ்ஜெனி பிரிகோஜின் விமானவிபத்தில் உயிரிழந்துள்ளதை மரபணுபரிசோதனைகளின் பின்னர் ரஷ்யா உறுதி செய்துள்ளது.

பத்து உடல்களும் உறுதி செய்யப்பட்டுள்ளன. அவை விமானத்தில் பயணம் செய்தவர்களின் பெயர் விபரங்களோடு ஒத்துப்போகின்றன என விசாரணை குழு தெரிவித்துள்ளது. மூலக்கூறு மரபியல் சோதனைகள் இடம்பெற்றன.

அதனடிப்படையில் உயிரிழந்த பத்து பேரினதும் உடல்களும் அடையாளம் காணப்பட்டுள்ளன என ரஷ்யா தெரிவித்துள்ளது.

(அ)

# இந்தியாவின் கரிசனைகளுக்கு முரணான எந்த செயல்பாட்டையும் ஆதரிப்பதில்லை!

## கூறுகிறார் சுமந்திரன் எம்.பி.

கொழும்பு, ஓக. 29

**இந்தியாவின் நட்பு நாடு அல்லாத, இந்து சமுத்திரப்பிராந்தியத்தைச் சாராத சீனா, இப்பிராந்தியத்தின் பிறிதொரு நாட்டில் முன்னெடுக்கக்கூடிய சில நடவடிக்கைகள் இந்தியாவுக்குப் பாதுகாப்புக் கரிசனைகளைத் தோற்றுவிப்பது முற்றிலும் நியாயமானது என சுட்டிக்காட்டியுள்ள இலங்கைத் தமிழரசுக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன், இந்தியாவின் கரிசனைகளுக்கு முரணான எந்தவொரு செயற்பாட்டையும் தாம் ஆதரிக்கப்போவதில்லை எனத் தெரிவித்துள்ளார்.**

இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் இவ்வாரம் இலங்கைக்கு விஜயம் செய்யவிருக்கும் அதேவேளை, எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 25 ஆம் திகதி 'ஷி யான் 06' என்ற சீன ஆய்வுக்கப்பல் நாட்டுக்கு வருகை தரவுள்ளது.



இவை இலங்கையில் இந்திய - சீன இராஜதந்திர மோதலுக்கு வழிவகுக்கும் எனவும், மேற்குறிப்பிட்ட நாடுகளுடனான இலங்கையின் இருதரப்பு உறவுகளில் பாதிப்பை ஏற்படுத்தும் எனவும் அரசியல் விமர்சகர்கள் அபிப்பிராயம் வெளியிட்டுள்ளனர்.

இருப்பினும் இலங்கைக்கும் இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளில் எவ்விதமான பதற்றங்களும் இல்லை என்றும், இந்தியப் பாதுகாப்பு அமைச்சரின் விஜயம் மற்றும் சீன ஆய்வுக்கப்பலின் வருகை என்பன நிகழ்ச்சி நிரலிடப்பட்டதன் அடிப்படையில் நடைபெறுவதனால் எவ்விதமான குழப்பங்களும் இல்லை என்றும் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

இவ்வாறானதொரு பின்னணியில் இந்தியாவின் பாதுகாப்புக் கரிசனைகள் நியாயமானவை என்று இதற்கு முன்னரும் பல்வேறு சந்தர்ப்பங்களில் கூறியிருக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன், இவ்விவகாரத்திலும் இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் அமைந்துள்ள இந்தியா வெளிப்படுத்தும் பாதுகாப்பு தொடர்பான கரிசனைகள் முற்றிலும் நியாயமானவை என்று சுட்டிக்காட்டினார்.

இந்தியாவுக்கு சார்பாக செயற்படவேண்டும் என்ற நோக்கில் இக்கருத்தை வெளியிடவில்லை எனக் குறிப்பிட்ட அவர், 'இந்தியா இந்து சமுத்திரப்பிராந்தியத்தில் உள்ளது. இருப்பினும் சீனா இப்பிராந்தியத்துக்கு உட்பட்ட நாடு அல்ல. எனவே இந்தியாவின் நட்பு நாடு அல்லாத சீனா, இப்பிராந்தியத்தின் பிறிதொரு நாட்டில் முன்னெடுக்கக்கூடிய சில நடவடிக்கைகள் இந்தியாவுக்கு பாதுகாப்புசார் கரிசனைகளைத் தோற்றுவிப்பது நியாயமானதொன்றேயாகும்' என்று கூறினார்.

அதுமாத்திரமன்றி இவ்விடயத்தில் எவ்வித முரண்பாடுகளும் இல்லை என்று இலங்கை அரசாங்கம் கூறுவதில் அர்த்தமில்லை என்றும், மாறாக இதில் இந்தியாவின் கருத்துக்கு இடமளிக்கவேண்டும் என்றும் வலியுறுத்திய சுமந்திரன், இந்தியாவின் கரிசனைகளுக்கு முரணான எந்தவொரு செயற்பாட்டையும் தாம் ஆதரிக்கப்போவதில்லை என அவர் குறிப்பிட்டார். (அ)

# அழிக்கப்பட்ட பாடசாலை உபகரணங்களை மாணவர்களுக்குப் பகிர்ந்தளித்திருக்கலாம்!

## ஓமல்பே சோபித தேரர் ஆலோசனை

கொழும்பு, ஓக. 29

தரமற்றவை என கூறி சுங்கத் துறையினரால் அழிக்கப்பட்ட பாடசாலை உபகரணங்களை வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மாணவர்களுக்கு பகிர்ந்தளித்திருக்கலாம். வறுமையில் வாடும் மக்கள் வாழும் இந்த நாட்டில் தான்தோன்றித்தனமான தீர்மானங்களை மேற்கொள்ளாமல் கிடைக்கபெறும் வளங்களைப் பாதுகாக்குமாறு கூறும் புத்தரின் போதனைகளைப் அனைவரும் பின்பற்றி நடக்க வேண்டுமென ஓமல்பே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

பாடசாலை மாணவர்கள் பயன்படுத்தும் பல கோடி மதிப்புள்ள காலணிகள், புத்தக பைகள், தொப்பிகள் போன்ற பல உபகரணங்கள் தரமற்றவை எனக் கூறி சுங்கத் துறையினரால் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டமை தொடர்பில் கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

உணவுப் பொருட்கள் மற்றும் மருந்துகள் தரமற்றவை என கூறி அதனை அழிப்பதனை ஏற்றுக் கொள்ளலாம்.

இருப்பினும் பாடசாலை உபகரணங்கள் தரமற்றவை என்பதால் அது உடலுக்கு பாதிப்பை ஏற்படுத்துமா? பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் தனது பாடப்புத்தகங்களை கொண்டு செல்வதற்கு புத்தகப்பை இன்றி பொலித்தீன் பைகளில் எடுத்துச் செல்லும் எத்தனை மாணவர்கள் நாட்டில் இருக்கிறார்கள்?

சப்பாத்து இல்லாது செருப்பினை அணிந்து செல்லும் மாணவர்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள்? அழிக்கப்பட்ட பாடசாலை உபகரணங்களை வறுமைக்கோட்டின் கீழ் வாழும் எத்தனை மாணவர்களுக்கு பகிர்ந்தளித்திருக்க முடியும்.

சுங்கத்தினர் கூறுவதை பார்க்கும்போது இன்றும் நம் நாட்டில் பயன்படுத்தப்படும் சில நிறுவனங்கள் தயாரிக்கும் பாடசாலை புத்தகப் பைகள் மற்றும் காலணிகள் தரமானதாக உள்ளதா?

தரமற்ற உபகரணங்களை பயன்படுத்துவதால் உடல் ரீதியான பாதிப்புகள் எதுவும் ஏற்படாது. நீங்கள் வழக்கத்திற்கு மாறான மருந்து அல்லது உணவை உட்கொண்டால் அது ஒருவரின் உடலை பாதிக்கும்.

ஆனால் ஒரு புத்தகப்பையும் இல்லாமல், ஒரு ஜோடி செருப்பும் இல்லாமல் இருக்கும் மாணவர்கள் இந்த உபகரணங்களை அழிக்கும் செயற்பாட்டை பார்க்கும் போது கவலை அடைவார்கள் அல்லவா-என்றார்.

(அ)

# இரண்டு வங்கிகளை முன்மொழிந்த நாமல்

கொழும்பு, ஓக. 29

அரச மற்றும் தனியார் பங்காளித்துவத்துடன் இரண்டு வங்கிகளை அமைக்கவேண்டும் என்று பொதுஜன பெரமுனவின் அம்பாந்தோட்டை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ முன்மொழிந்தார்.

பொரளையில் நடைபெற்ற பொதுஜன பெரமுனவின் கூட்டத்தின்போது உரையாற்றிய போதே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் கூறினார்.

முதலீட்டு வங்கி ஒன்றையும் அபிவிருத்தி வங்கி ஒன்றையும் அமைக்கவேண்டும் என்றும் பெரிய, சிறு மற்றும் நடுத்தர வணிகர்களின் நலன்களுக்கு சேவை செய்யும் இந்த இரண்டு வங்கிகளிலும் அரச மற்றும் தனியார் துறை இரண்டும் பங்குகளை வைத்திருக்கமுடியும் என்றும் அவர் கூறினார்.

மாறிவரும் உலகின் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் இவை அமைக்கப்படவேண்டும் எனவும், நீண்ட கால மற்றும் குறுகிய கால கடன்களை அபிவிருத்தி வங்கி வழங்கும் அதேவேளை, முதலீட்டு வங்கி வெளிநாடுகளில் முதலீடு செய்ய விரும்பும் இலங்கை தொழில்முனைவோருக்கு உதவ முடியும் என்று அவர் குறிப்பிட்டார்.

# 10,000 இற்கும் அதிகமான ஏரிகள் வறண்டநிலையில்!

கொழும்பு, ஓக. 29

நிலவும் கடும் வறட்சி காரணமாக நாடளாவிய ரீதியில் 10,000 இற்கும் அதிகமான குளங்கள் முற்றுமுழுதாக வறண்டுள்ளதாகவும் முக்கியமான அனைத்து நீர்த்தேக்கங்களிலும் நீரின் அளவு 35 - 40 வீதத்தினால் குறைந்துள்ளதாகவும் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் மூலம் பருவமழைக்கு முன்னதாக சேதமடைந்த தொட்டிகளைப் புனரமைக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

தற்போது நிலவும் எல்-நினோ செயன்முறை காரணமாக அடுத்த பருவத்தில் நல்ல மழைவீழ்ச்சி கிடைக்குமெனவும், அதற்கு அடுத்த பருவத்தில் மீண்டும் வறட்சி ஏற்படும் எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

எனவே பருவமழைக்கு முன் இந்த தொட்டிகளை புனரமைத்து அவற்றில் நீரை சேமிப்பதன் மூலம் விவசாயிகளின் பிரச்னைகள் பெருமளவில் தீர்க்கப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

# மனிதர்களுக்கும் மாடுகளுக்கும் முல்லைத்தீவில் காணி இல்லை

## சுட்டிக்காட்டுகிறார் ரவிகரன்

முல்லைத்தீவு, ஓக. 29

முல்லைத்தீவு மாவட்டத்தில் வனவளத் திணைக்களத்தின் ஆளுகையிலேயே மிக அதிகளவிலான நிலப்பரப்புக் காணப்படுவதாகவும் 3,389 குடும்பங்கள் குடியிருக்க காணியில்லாத நிலையில் வாழ்வதாகவும், 89 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கால நடைகளுக்கும் மேச்சல் தரையில்லை எனவும் வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்தார்.

நீண்ட காலமாக மேச்சல்தரைக்கான கோரிக்கை முன்வைக்கப்படுகின்ற போதிலும் இதுவரையில் மேச்சல்தரைக்குரிய காணிகள் வழங்கப்படவில்லை என்று சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

முல்லைத்தீவு மாவட்டத்தில் வாழும் 3,389 குடும்பங்களுக்கு குடியிருப்பதற்கு நிலம் இல்லை. தொழில் முயற்சிக்கென 28,626 இளஞர், யுவதிகள் ஒரு ஏக்கர் வீதம் தமக்குக் காணி தருமாறு மாவட்ட செயலகத்திடம் கோரிக்கை முன்வைத்துள்ள போதிலும் அதற்கு சாதகமான பதில்கள் இல்லை.

முல்லைத்தீவு மாவட்டசெயலகத்தின் 2022ஆம் ஆண்டுக்கான புள்ளிவிவரத்தின் அடிப்படையில், மாவட்டத்தின் மொத்த நிலப்பரப்பானது 2,415 சதுரகிலோமீற்றர் தரையாகவும், 202 சதுரகிலோ மீற்றர் உள்ளக நீர்ப் பிரதேசமாகவும் காணப்படுகின்றது.

இதில் கடந்த 2009ஆம் ஆண்டுக்கு முன்னர் 222, 006 ஏக்கர், 36.72சதவீதமான நிலம் வனவளத் திணைக்களத்தின் ஆளுகைக்குட்பட்டுக் காணப்பட்டது.

இந் நிலையில் கடந்த 2009 ஆம் ஆண்டுக்குப் பின்னர் 167,484 ஏக்கர், 30.37நிலப்பரப்பை வனவளத் திணைக்களம் மேலதிகமாக தனது ஆளுகையின் கீழ் கொண்டுவந்துள்ளது.

தற்போது காடுபேணல் சட்டத்தின்கீழ் ஒதுக்கக்காடுகளாக மீண்டும் 42,631 ஏக்கர் 7.15சதவீதமான நிலப்பரப்பை வனவளத் திணைக்களம் கோரியுள்ளது. அவ்வாறு குறித்த நிலப்பரப்பும் வனவளத் திணைக்களத்தினால் உள்வாங்கப்பட்டால் மொத்தமாக உள்ள முல்லைத்தீவு மாவட்டத்தின் நிலப்பரப்பில் 74.24 சதவீதமான நிலப்பரப்பு வனவளத் திணைக்களத்தின் ஆளுகைக்குள் உள்வாங்கப்பட்டுவிடும்.

மிகுதி நிலப்பரப்பில் பெரும்பகுதியை மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை, தொல்லியல் திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம், கனியமணல் திணைக்களம், படையினர் உள்ளிட்ட தரப்பினர் ஆளுகை செய்கின்றனர்.

குறிப்பாக வனவளத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டிலுள்ள நிலப்பரப்பில், மாவட்டத்தின் அபிவிருத்தித் தேவைக்காக சுமார் 50,000 ஏக்கர் காணி தேவையெனவும், விடுவித்துத் தருமாறு மாவட்டசெயலகம் கோரிக்கை விடுத்துள்ளபோதிலும் முறையான பதில்கள் இதுவரையில் கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஆனால் வேறு திணைக்களங்கள் காணிக் கோரிக்கை முன்வைக்கும்போதும், குடியேற்றங்களுக்காக காணிக் கோரிக்கைகள் முன்வைக்கப்படுகின்றபோதும் காணிகளை விடுவிக்கின்ற நிலை காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது-என்றார்.

(அ)

## திருமலை...

நடைபெற்ற மண்டபத்துக்குள் புகுந்த பிக்குகள் அங்கு குழப்பத்தை ஏற்படுத் தினர். இவர்கள் ஏற்படுத்திய குழப்பத் தால் கூட்டம் தடைப்பட்டது.

இதன்போது, "திரு கோணமலை அனைத்து இன மக்களும் வாழும் ஒரு பிரதேசம். பிக்குகளின் செயல்பாடுகள் போல் ஏனைய இனத்தவரும் இவ்வா றான செயல்பாடுகளை முன்னெடுப்பார் களானால், அதற்கு நீங்களே முன்னுதார ணமாக இருப்பீர்கள் என்று ஆளுநர் கூறினார்.

இது குறித்து ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட ஆளுநர்,

பிரதேச செயலாளரால் வழங்கப் பட்ட கடிதத்தை மீளப்பெற்றாலும், பிரதேச சபையின் அனுமதியின்றி எந்த ஒரு கட்டுமானப் பணிகளும் முன்னெ டுக்க முடியாது - என்றார். (ஐ)

## காணி...

பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் உள்ள காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் காணிகளுள் ஒருபகுதியை, கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாணம் மாவட்டங்களின் பல்வேறு பகுதிகளிலும் காணியற்ற நிலை யில் வாழ்ந்துவரும் குடும்பங்களுக்கு பகிர்ந்தளிக்க நடவடிக்கை எடுக்குமாறு கடந்த நான்கு வருடங்களுக்கு மேலாக, தாங்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பின ருக்கும் என்னால் தொடர் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ள போதும், அவை தொடர்பில் இதுவரை எவ்வித நடவடிக் கைகளும் மேற்கொள்ளப்பட வில்லை.

இந்நிலையில் மேற்படி காணிகள் தென்னிலங்கையின் தொழிலதிபர்க ளுக்கும், எமது மாவட்டத்தின் இயற்கை வளங்களைச் சுரண்டும் நோக்கோடு இயங்கக்கூடிய தனியார் நிறுவனங்க ளுக்கும் கூறுபோடப்படுவதை, கையா லாகாத்தனத்தோடு பார்த்திருக்க வேண் டிய நிர்ப்பந்தம் எமக்கு ஏற்பட்டுள்ளது. பச்சிலைப்பள்ளி பிரதேசத்தின் தர்மக் கேணிப் பகுதியிலுள்ள 120 ஏக்கர் நில சீர்திருத்த ஆணைக்குழுவின் காணி, புத்தளத்தைத் தளமாகக் கொண்ட ஓர் தனியார் நிறுவனத்துக்கு வழங்கப்பட்டு, அந்தக் காணியின் துப்புரவுப் பணிகள் தற்போது நடைபெற்று வருவதாக அறிய டிகிறது.

போராலும் இடப்பெயர்வுகளாலும் பெரும் பாதிப்புகளை எதிர்கொண்டு இந்த மண்ணிலே மீளவும் குடியேறி, தமக்கென்றொரு நிலையான வாழ்வை அமைத்துக் கொள்வதற்கு சொந்த காணி யற்ற நிலையில் உறவினர், நண்பர்களின் வீடுகளிலும், காணிகளிலும் வாழவேண் டிய அவலநிலைக்கு தள்ளப்பட்டுள்ள ஆயிரக்கணக்கான குடும்பங்கள் யாழ்ப் பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் நிர்க்கதியற்றிருக்கத்தக்கதாக, அரச காணிகளை தனவந்தர்களுக்கும் இந்த மாகாணத்தோடு எந்தத் தொடர்புகளும் அற்றவர்களுக்கும் தாரைவார்த்துக் கொடுப்பது என்பது அல்லலுறும் எமது மக்களுக்கு செய்யப்படுகின்ற துரோக செயலாகவே அமையும் என்பதில் தாங்களும் கரிசனம் கொள்வீர்கள் என நம்புகிறேன்.

இதுதவிர, தமிழர் தாயகத்தின் பல் வேறு பகுதிகளிலும் சிங்களக் குடியேற் றங்கள் மேற்கொள்ளப்பட்டு, எமது மக்களின் பூர்வீக நிலங்கள் மெல்ல மெல்ல பறிபோகும் அபாயகரமான நடைமுறைச் சூழலொன்றின் பின்னணி யில், நீண்டகாலமாக வெற்றுக் காணிக ளாக உள்ள பச்சிலைப்பள்ளியின் காணி சீர்திருத்தக் ஆணைக்குழுவின் காணிக ளுக்கும் அதேகதி ஏற்படாது என்பதற்கு எம்மிடம் எதுவித உத்தரவாதமும் இல் லாத நிலையில், குறித்த காணிகளின் ஒரு பகுதியையேனும் காணியற்ற எமது மக்க ளுக்கு பகிர்ந்தளிக்க நடவடிக்கை எடுப்பதன் மூலம் கிளிநொச்சி மாவட் டத்தின் இருப்பை நிலைநிறுத்துவதற்கு ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கி றேன் - என்றும் அதில் குறிப்பிட்டுள் ளார். (ஐ)

## குருந்தூர்...

நிலைமைகளை அவதானித்தனர்.

அதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலே இவ்வாறு தெரிவித்தார்.

குருந்தூர்மலை பிரதேசத்திலே வனவளத் திணைக்களம், தொல்லியல் போன்ற ஆளுகைக்குட்பட்ட காணி களை விடுவிப்பது சம்பந்தமாக கள நிலவரத்தை அவதானித்தோம்.

இதன் அடிப்படையில், உடனடியாக இந்த நிலங்கள் விடுவிக்கப்படும் சூழல் இல்லாதிருக்கின்றது. மீண்டும் ஜனாதி பதியோடு பேசுகின்ற வாய்ப்பை ஏற் படுத்த வேண்டும் என்று வந்திருக்கின்ற உயர் அதிகாரிகள் இந்த விடயம் சம்பந்தமாக கூறியிருக்கிறார்கள்.

நாங்கள் மக்கள் இருந்த பூர்வீக காணிகள் என்று உறுதிபட கூறியிருக் கின்றோம். அதனை ஜனாதிபதியிடமும் எடுத்து கூறி விடுவிப்பதற்கான முயற் சியை மேற்கொள்வோம். என்னைப் பொறுத்தமட்டிலே இது உடனடியாக நடக்குமா என்று சந்தேகம் இருக்கிறது - என்றார். (ஐ)

## ஐக்கிய...

இதற்காகவே நாம் எதிர்க்கட்சி களுடன் பேச்சு நடத்துகிறோம். ஜே. வி.பி, கம்யூனிசக் கட்சி உள்ளிட்ட கட்சிகளுடனும் பேச்சுவார்த்தை நடத்து கிறோம்.

ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங் கத்தை தோற்கடித்து, மக்களின் பிரச்சி னைகளை தீர்க்கக்கூடிய ஒரு அரசாங் கத்தை ஸ்தாபிக்கவேண்டும் என்பது தான் எமது பிரதான நோக்கமாகும்.

இதற்கான பொதுவான வேலைத் திட்டமொன்றை நாம் ஆரம்பித் துள்ளோம்.

ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து பலமிக்கதொரு கூட்ட ணியை ஸ்தாபிக்க வும் பேச்சு வார்த்தையை முன்னெ டுத்துள்ளோம்.

சரியான நேரத்தில் இதுதொடர்பாக அறிவிப்போம். எவ்வாறாயினும், தற்போது மக்கள் படும் துன்பத்திலி ருந்து மக்களை எப்படியாவது மீட்டெ டுக்க வேண்டும் என்பதுதான் எமது நோக்கமாக இருக்கிறது-என்றார். (அ)

## அங்க...

அங்கப் பிரதட்சணம் செய்து வருகிறார். திருவிழா தொடங்கிய நாள்முதல் வழமை போன்று அவர் இந்த வருடமும் தினமும் அங்கப் பிரதட்சணம் செய்து வந்துள்ளார்.

நேற்றும் வழமை போன்று அங்கப் பிரதட்சணத்தை நிறைவு செய்த நிலையில் திடீரென மயங்கி வீழ்ந்துள் ளார். உடனடியாக அவர் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப் பட்ட நிலையில் அவர் ஏற்கனவே உயிரி ழந்து விட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

மாரடைப்பு காரணமாகவே மரணம் சம்பவித்ததாக பிரேத பரிசோதனை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

மரண விசாரணைகளை பருத்தித் துறை ஆதார மருத்துவமனை திடீர் மரண விசாரணை அதிகாரி சதானந்தம் சிவராஜா நடத்தினார். (ஐ-02-03)

## வீடு...

இவ்வாறு வழங்கப்பட்டுள்ளது.

இடப்பிரச்னை காரணமாக எம். பிகளுக்கு மாதிவெல உத்தியோகபூர்வ வீட்டு தொகுதியில் வீடுகளை வழங்க முடியாதுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான மாதிவெல உத்தியோகபூர்வ வீடமைப்பு தொகுதி யில் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட அதிகாரிகள் குழு ஒன்று தங்கியுள்ளது.

மேலும், இங்கு வீடுகளை பெற்ற மூன்று அமைச்சர்கள் கடந்த மே 16ஆம் திகதி வரை அவற்றை மீளக் கையளிக்க வில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# வடக்கு, கிழக்கில் 30ஆம் திகதி போராட்டத்துக்கு முழு ஆதரவு!

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிவிப்பு

மட்டக்களப்பு, ஒக. 29

வடக்கு-கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் எதிர்வரும் 30 ஆம் திகதி முன்னெடுக் கப்படவுள்ள போராட்டத்துக்கு ஜன நாயக கூட்டமைப்பினர் முழு ஆதரவு வழங்கவுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட் டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் அறிவித் துள்ளார்.

மட்டக்களப்பு வாவிக்கரையிலுள்ள பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரத்தின் காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப் பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எதிர்வரும் 30 ஆம் திகதி சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினம் உலகெங்கும் நினைவு கூரப்படவுள்ளது.

இந்நிலையில் வடக்கில் மன்னாரி லும், கிழக்கில் மட்டக்களப்பிலும் எதிர்வரும் 30 ஆம் திகதி வலிந்து காணா மல் ஆக்கப்பட்டோரின் உறவுகளினால் நீதிகோரி பாரிய ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

எனவே இந்த போராட்டத்துக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முழு ஆதரவையும் வழங்குவது மாத்திர மல்லாது எமது உறவுகளுக்கான நீதியை பெற்றிட தேசியத்தின்பால் ஈர்ந்துள்ள அனைவரும் இந்த ஆர்ப்பாட்ட ஊர்வ லத்தில் கலந்துகொள்ள வேண்டும்- என்றார்.

இவ்ஊடகவியலாளர் சந்திப்பில் புளொட் அமைப்பின் இணைப்பாளர் கேசவன், ஈ.பி.ஆர்.எல். அமைப்பின் மத்தியகுழு உறுப்பினரும் கிழக்கு மாகாண முன்னாள் மாகாணசபை உறுப்பினர் இரா. துரைரெட்ணம், ரெலோ அமைப்பின் பிரசன்னா இந்திர குமார், ஜனநாயப் போராளிகள் கட்சி இணைப்பாளர் நகுலேஸ்வரன் ஆகி யோர் கலந்துகொண்டனர். (அ)

# குருந்தூர்மலை காணி விடுவிப்பு; அதிகாரிகள், எம்.பிக்கள் களவிஜயம்!



முல்லைத்தீவு, ஒக. 29

குருந்தூர்மலையில் தொல்பொருள் திணைக்களத்தால் சுவீகரிக்கப்பட்ட தமிழ் மக்களின் காணிகளை விடுவிப்பது தொடர்பில் அரச அதிகாரிகள், மக்கள் பிரதிநிதிகள் நேரில் சென்று நிலை மையை அவதானித்தனர்.

குருந்தூர்மலையில் 1933.05.12 அன்று வர்த்தமானி ஊடாக 78 ஏக்கர் 2 ரூட் 12 பேர்ச் காணி தொல்பொருள் திணைக்களத்தால் சுவீகரிக்கப்பட்டது. இந்நிலையில், 306 ஏக்கர் காணியை சுவீகரிக்கும் நோக்கில் தொல்பொருள் திணைக்களம் எல்லைக்கற்களை நாட்டியது.

இந்த நிலையில், தமது காணிகளை விடுவிக்குமாறு அப்பகுதியில் பரம்ப ரையாக விவசாய நடவடிக்கையில் ஈடு பட்டு வந்த தமிழ் மக்கள் கோரி வந்த னர். இந்த நிலையில் இது தொடர்பில் உயர் அரச அதிகாரிகள், மக்கள் பிரதி நிதிகள் நேற்று அங்கு சென்றிருந்தனர்.

இந்த களப்பயணத்தில், முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி குழு தலைவரும் இராஜாங்க அமைச்சருமான காதர் மஸ் தான், பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சாள்ஸ் நிர்மலநாதன், முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் அ. உமாமகேஸ்வரன், முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அர சாங்க அதிபர் (நிர்வாகம்) க. கன கேஸ்வரன், முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி) சி. குணபாலன், கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் ம. உமாமகள் மற்றும் தொல்பொருள் திணைக்களத்தின் மன்னார், வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களின் உதவிப் பணிப்பாளர் ஆர். டி. ஜெயதிலக, மாவட்ட வனவள பாதுகாப்பு திணைக்களம், நீர்ப்பாசன திணைக்களங்களின் அதிகாரிகள் பங்கேற்றிருந்தனர்.

இருப்பினும், காணிகளில் விடுவிப்பு குறித்து சாதகமான பதில் எதுவும் தெரிவிக்கப்படவில்லை. இது தொடர் பில், ஜனாதிபதி செயலகம் மற்றும் தொல்பொருள் திணைக்கள பணிப்பா ளர் ஆகியோருக்கு தெரியப்படுத்தி அதனூடாக மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று இதன்போது தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## யாழில் கத்திமுனையில்...

அவரிடமிருந்த 30 ஆயிரம் ரூபாயையும் உண்டியலில் இருந்த சுமார் 15 ஆயிரம் ரூபாயையும் கொள்ளையடித்தது.

மறுநாளான வெள்ளிக்கிழமை திரு நெல்வேலி - பாற்பண்ணையில் வீடு ஒன் றுக்கு நுழைந்து அவர்களை கத்தி முனை யில் அச்சுறுத்திய நிலையில், அவர்களின் உதவிக்குரல் கேட்டு அயலவர்கள் எழுந்ததையடுத்து அங்கிருந்து தப்பி யோடியது.

இந்நிலையில், சனிக்கிழமை நள்ளிரவு சங்கிலியன் வீதியில் வீடொன்றுக்குள் புகுந்து 24 பவுண் நகைகளை கொள்ளை யிட்டது. இதேசமயம், இணுவிலில் வீடொன் றுக்குள் புகுந்து வயோதிப தம்பதியரை கத்திமுனையில் மிரட்டி 4 பவுண் நகைகளை கொள்ளையிட்டது.

இந்தச் சம்பவங்கள் தொடர்பில் தீவிர விசாரணையில் ஈடுபட்ட யாழ். மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவு பொலி ஸார் நேற்று சந்தேகநபர்கள் நால்வரை கைது செய்தனர்.

அவர்களிடம் நடத்தப்பட்ட விசாரணையில், இந்தக் கொள்ளை சம்பவங்களுக்கு முன்னர் நல்லூர் பகுதியில் முதியவர்களை மிரட்டி கைபேசி மற்றும் பணத்தை வழிப்பறி செய்துள்ளனர் என்று தெரிய வந்தது.

கைதானவர்கள் மீது நீதிமன்றில் முற் படுத்த பொலிஸார் நடவடிக்கை களை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-03)

ஈழநாடு
Eelanadu

# யாழ். மாவட்டத்தில் வறட்சி; 22,044 குடும்பங்கள் பாதிப்பு!

யாழ்ப்பாணம், ஓக. 29

யாழ். மாவட்டத்தில் 22,044 குடும்பங்களைச் சேர்ந்த 70,408 பேர் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளனர் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

யாழ்.மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற வறட்சி தொடர்பிலான கலந்துரையாடலின்போதே இத்தகவல் வெளியாகியுள்ளது.

இந்நிலையில் நெடுந்தீவு, ஊர்காவற்றுறை, மருதங்கேணி, சங்கானை மற்றும் சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவுகளில் குடிநீர்ப் பற்றாக்குறையான பகுதிகளுக்கு தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையத்தின் நிதி உதவியுடன் பவுசர்கள் மூலம் குடிதண்ணீர் வழங்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் தற்போதைய நிலை தொடர்ந்து நீடிக்கும் பட்சத்தில் குடிதண்ணீர்த் தேவையுடைய குடும்பங்களின் தொகை அதிகரிக்கக்கூடும் எனவும், அதற்கான ஏற்பாடுகள் செய்யப்படல்வேண்டுமென குறித்த பிரதேச செயலாளர்களால் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இதன் போது நெடுந்தீவு உட்பட தங்களால் நீர்வழங்கல் செய்யப்படும் பிரதேசங்களிற்கு குடிதண்ணீர்த் தட்டுப்பாட்டை சமாளிக்கக்கூடிய வகையில் நீர்வழங்கலை மேற்கொள்ள முடியுமெனவும் தற்போது மாவட்டத்தில் அவ்வாறான சேவைகள் 18 குடிதண்ணீர் மூலங்கள் மூலமாக செயற்படுவதாகவும் நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை பொறியியலாளர் தெரிவித்தார்.

அதேவேளை எதிர்வரும் கால வறட்சியினை கருத்திற் கொண்டு நீர்ப் பாவனையில் விரயத்தைத் தவிர்த்து சிக்கனமாக நீரைப் பாவிக்க பொதுமக்களுக்கு அறிவுறுத்த வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டது. (அ)

# தொழில்நுட்ப அமைச்சின் செயலாளர் இராஜினாமா

கொழும்பு, ஓக. 29

தொழில்நுட்ப அமைச்சின் செயலாளர் பேராசிரியர் நிரஞ்சன் குணவர்தன தமது பதவியை இராஜினாமா செய்வதற்கு தீர்மானித்துள்ளார்.

தேசிய அடையாள அட்டையை டிஜிட்டல் மயமாக்குவது தொடர்பில் பிரயோகிக்கப்பட்ட அழுத்தம் காரணமாக அவர் இராஜினாமா செய்வதற்கு தீர்மானித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

எவ்வாறாயினும், பேராசிரியர் நிரஞ்சன் குணவர்தன அரசாங்கத்தில் பல்வேறு பொறுப்புகளை வகித்து வருவதன் காரணமாக அவற்றில் ஏதேனுமொன்றை தெரிவு செய்யுமாறு ஜனாதிபதியின் செயலாளரினால் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து இந்த தீர்மானம் எட்டப்பட்டுள்ளதாக ஜனாதிபதி அலுவலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பேராசிரியர் நிரஞ்சன் குணவர்தன தற்போது தொழில்நுட்ப அமைச்சின் செயலாளராகவும், தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் தலைவராகவும் கடமையாற்றி வருகின்றார்.

அத்துடன், மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையில், மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக தாம் நியமிக்கப்பட்டதை அடுத்து அமைச்சின் செயலாளர் பதவியில் இருந்து விலகுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பேராசிரியர் நிரஞ்சன் குணவர்த்தன தெரிவித்துள்ளார். (அ)

# கண் சத்திர சிகிச்சையில் சிக்கல் லென்ஸ்களுக்கு கடும் தட்டுப்பாடு

கொழும்பு, ஓக. 29

மருத்துவ வழங்கல் பிரிவில் எந்தவிதமான லென்ஸ்களும் இல்லாததால், எதிர்காலத்தில் கடும் தட்டுப்பாடு ஏற்பட வாய்ப்புள்ளதாக அதிகாரிகளுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக அவற்றுக்கான அவசர கொள்முதலில் ஈடுபடும் பட்சத்தில் மாதமொன்றுக்கு சுமார் 20 கோடி ரூபா வரை அரசாங்கத்திற்கு நட்டம் ஏற்படும் என சுகாதார சங்கங்கள் தெரிவிக்கின்றன.

நாடளாவிய ரீதியாக உள்ள வைத்தியசாலைகளில் சத்திர சிகிச்சைக்காக மாதத்திற்கு 15,000 லென்ஸ்கள் இருந்தாலும்,

வைத்தியசாலைகளில் தற்போது மருத்துவ வழங்கல் துறையால் வழங்கப்பட்ட லென்ஸ்கள் மற்றும் நன்கொடையாக பெறப்பட்ட லென்ஸ்கள் மட்டுமே உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# ஈ.பி.எவ். நிதியில் கைவைக்காதே!

## யாழ்ப்பாணத்தில் நேற்று போராட்டம்





யாழ்ப்பாணம், ஓக. 29

**உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்புக்காக ஊழியர் சேமலாப நிதி மற்றும் நம்பிக்கை பொறுப்பு நிதியங்களை பயன்படுத்த முனைவதற்கு எதிராக யாழ்ப்பாணத்தில் போராட்டமொன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.**

யாழ். மாவட்ட செயலகத்திற்கு முன்னால் நேற்று திங்கட்கிழமை மதியம் 12 மணியளவில் இந்த போராட்டம் இடம்பெற்றது.

அமைச்சரவையில் 2023 ஜூலை 01ஆம் திகதி நிறைவேற்றிக் கொள்ளப்பட்ட பரிந்துரையின் மூலமாக ஊழியர் சேமலாப நிதி மற்றும் நம்பிக்கை பொறுப்பு நிதிகளை உள்நாட்டு கடன் மறுசீரமைப்பிற்குப் பயன்படுத்த அரசாங்கத்தினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.


இத்தீர்மானத்தை நடைமுறைப்படுத்த முனைவதன் மூலம் ஊழியர் சேமலாப நிதி மற்றும் நம்பிக்கை பொறுப்பு நிதியங்களில் கணக்குகளைக் கொண்டுள்ள சுமார் 25 இலட்சம் உழைக்கும் வர்க்க அங்கத்தவர்களின் ஒரேயொரு ஓய்வூதியச் சேமிப்பை அவர்களின் அனுமதியின்றி பயன்படுத்த அரசாங்கம் முயல்கின்றது என்றும்,

பொருளாதார நிபுணர்களின் எச்சரிக்கையின்படி இந்த உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்புத் திட்டம் ஊழியர் சேமலாப நிதி மற்றும் நம்பிக்கை பொறுப்பு நிதியக் கணக்குகளின் மீது சுமத்தப்படும்போது அனைத்து ஊழியர்களினதும் சேமிப்புக்களில் இருந்தும் அரைவாசித்தொகை (50%) எதிர்வரும் 16 வருட காலப் பகுதியில் இல்லாமற்போகும் அபாயம் உள்ளது. இதன் தொடர்ச்சியாக அரச ஊழியரின் ஓய்வூதிய நிதியையும் இவ்வாறு கையாள அரசாங்கம் முற்படுகின்றது. இதன் மூலம் ஊழியர் சேமலாப நிதி மற்றும் நம்பிக்கை பொறுப்பு நிதிய அங்கத்தவர்களுக்கு நிதி ரீதியான உடனடிப் பாதிப்பும் நீண்ட காலத்தில் முழுமையாக இவ்விரு நிதிகளும் கிடைக்கபெறாத அபாய நிலையும் உள்ளது எனவும் போராட்டகாரர்கள் குற்றம்சாட்டினர்.

இந்நிலையில் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் சங்கம், வடமாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கம்,அகில இலங்கை அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கம்,பொது முகாமைத்துவ உதவியாளர் சேவைச் சங்கம், வடமாகாண சமூக சேவைகள் உத்தியோகத்தர்கள் சங்கம்,வடமாகாண கால்நடை போதானாசிரியர் சங்கம், ஸ்ரீலங்கா தபால் தொலைதொடர்பு சேவை உத்தியோகத்தர் சங்கம், வடமாகாண அரச சாரதிகள் சங்கம், வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் தொழிற்சங்கம் ஆகிய 9 தொழிற்சங்கங்கள் போராட்டத்திற்கு ஆதரவளித்தன. (அ)

# தேரில் எழுந்தருளி அருள்பாலித்த தெல்லிப்பழை துர்க்கை அம்மன்!





யாழ்ப்பாணம், ஓக. 29

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருவிழாவின் தேர்த் திருவிழா நேற்று இடம்பெற்றது.

அதிகாலை தேர்த்திருவிழாவுக்கான கிரியைகள் ஆரம்ப மாகி காலை 7.30 மணியளவில் வசந்தமண்டபப் பூசை ஆரம்பமானது.

வசந்தமண்டபப் பூசை வழிபாடு இடம்பெற்றதைத் தொடர்ந்து துர்க்கையம்மன் சித்திரத் தேரில் எழுந்தருளினார்.

இதன்போது பலரும் தமது நேர்த்திக்கடன்களை நிறைவேற்றும் பொருட்டு விசேட வழிபாடுகளில் ஈடுபட்டனர்.

இதேவேளை இன்று செவ்வாய்க்கிழமை துர்க்கா புஷ்கரணி தீர்த்தக் கேணியில் காலை துர்க்கை அம்பாளின் தீர்த்தோற்சவமும், மாலை கொடியிறக்க உற்சவமும் நடைபெறவுள்ளது. (அ)



# காலி சிறைச்சாலை கைதிகளை பார்வையிட மீண்டும் சந்தர்ப்பம்

கொழும்பு, ஓக. 29

காலி சிறைச்சாலையில் கைதிகளைப் பார்வையிடுவதற்கு உறவினர்களுக்கு மீண்டும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கைதிகளிடையே காய்ச்சல் மற்றும் தோல் தொடர்பான தொற்று பரவியமையினால் கடந்த நாட்களில் கைதிகளைப் பார்வையிடுவதற்கு உறவினர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை.

எவ்வாறாயினும், கைதிகளை வெளியில் அழைத்துச் செல்லும் நடவடிக்கை தொடர்ந்தும் தவிர்க்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

காலி சிறைச்சாலையில் கைதிகளிடையே காய்ச்சல் மற்றும் தோல் தொடர்பான தொற்று பரவியமையினால் 2 கைதிகள் உயிரிழந்ததுடன், 09 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

நோய் தொற்று தற்போது கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக சிறைச்சாலை அதிகாரி ஒருவர் கூறினார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 29.08.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.



## மெஸ்ஸி அசத்தல் கோல் இன்ரர் மியாமி வெற்றி!

நியூயோர்க், ஒக. 29

மேஜர் லீக் உதைபந்தாட்ட தொடரில் இன்ரர் மியாமி அணிக்காக மெஸ்ஸி கோல் அடித்து அசத்தியதால் அந்த அணி, நியூயோர்க் அணியை வெற்றி பெற்றது.

மேஜர் லீக் உதைபந்தாட்டத் தொடர் அமெரிக்காவில் நடைபெற்று வருகிறது. இந்த தொடரின் இன்ரர் மியாமி அணிக்காக மெஸ்ஸி களம் இறங்கினார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற லீக் போட்டியில் நியூயோர்க் ரெட் புல்ஸ் மற்றும் இன்ரர் மியாமி அணிகள் மோதின. இதில் முதலில் அறிவிக்கப்பட்ட விளையாடுவோர் அணியில் மெஸ்ஸி இடம்பெறவில்லை. இது அவரின் ரசிகர்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. இருப்பினும் பிற்பாதி ஆட்ட நேரத்தில் மெஸ்ஸி மாற்றுவீரராக களமிறங்கி ரசிகர்களுக்கு இன்ப அதிர்ச்சி கொடுத்தார்.

மேலும் களம் இறங்கி அற்புதமாக கோல் அடித்து அணியை வெற்றி பெற வைத்தார். இந்தப் போட்டியில் இன்ரர் மியாமி அணி 2-0 என்ற கோல் கணக்கில் நியூயோர்க் ரெட் புல்சை வீழ்த்தி வெற்றி பெற்றது.

இன்ரர் மியாமி அணி தரப்பில் மெஸ்ஸி, டியாகோ கோம்ஸ் தலா ஒரு கோல் அடித்தனர். இதன் மூலம் மெஸ்ஸி இன்ரர் மியாமி அணிக்காக விளையாடிய அனைத்து போட்டிகளிலும் கோல் அடித்தவர் என்ற சிறப்புடன் வலம் வருகிறார். அவர், இதுவரை 9 போட்டிகளில் விளையாடி 11 கோல்கள் அடித்துள்ளார்.

## சவூதி அரேபியா உதைபந்து லீக் ரொனால்டோ ‘ஹட்ரிக்’ கோல்!

ரியாத், ஒக. 29

அல் பதே அணிக்கு எதிரான போட்டியில் அல்-நாசர் அணி வீரர் கிறிஸ்ரியானோ ரொனால்டோ ஹட்ரிக் கோல் அடித்து அணியை வெற்றி பெற வைத்தார்.

சவூதி அரேபியா உதைபந்தாட்ட லீக் தொடர் கடந்த 11ஆம் திகதி தொடங்கி நடைபெற்று வருகிறது. இதில் அல்-நாசர் அணிக்காக போர்த்துக்கல் நாட்டை சேர்ந்த பிரபல வீரர் கிறிஸ்ரியானோ ரொனால்டோ விளையாடி வருகிறார்.

இதில் நடந்த போட்டி ஒன்றில் அல்-நாசர் மற்றும் அல் பதே அணிகள் மோதின. இந்த போட்டியில் அல்-நாசர் அணி வீரர் ரொனால்டோ ஹட்ரிக் கோல் அடித்து அணியின் வெற்றியில் முக்கிய பங்கு வகித்தார்.




மேலும் சக வீரர் கோல் அடிக்க உதவியும் செய்தார். இந்த போட்டியில் அல்-நாசர் அணி 5-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ஐ)

## ஆசியக் கிண்ணத் தொடர் ஆப்கான் அணி அறிவிப்பு!



காபூல், ஒக. 29

ஆசிய கிண்ணத் தொடர் நாளை ஆரம்பமாகவுள்ள நிலையில் ஆப்கானிஸ்தான் அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

நாளை ஆசியக் கிண்ணத் தொடர் ஆரம்பமாகவுள்ளது. இந்தத் தொடரில் இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான், நேபாளம் உள்ளிட்ட 6 அணிகள் கலந்து கொள்கின்றன. நிலையில் நேற்று ஆப்கானிஸ்தான் அணி அறிவிக்கப்பட்டது.

அணி விவரம் - ஹஷ்மத்துல்லாஹ் ஷாஹிதி (அணித் தலைவர்), ரஹ்மானுல்லா குர்பாஸ், இப்ராஹிம் ஜட்ரான், ரியாஸ் ஹசன், ரஹ்மத் ஷா, நஜிபுல்லா ஜட்ரான், முகமது நபி, இக்ராம் அலிகில், குல்பாடின் நைப், கரிம் ஜனத், அப்துல் ரஹ்மான், ஷரபுதீன் அஷ்ரப், முஜீப் உர் ரஹ்மான், நூர் அகமது, சுலிமான் ஷாபி, பசல்ஹாக் பாரூக்கி. (ஐ)




## போர்முலா வன் பந்தயம் வெர்ஸ்டபென் சம்பியன்!

ஆம்ஸ்ரர்டாம், ஒக. 29

போர்முலா - வன் கார் பந்தயம் நேற்று முன்தினம் நெதர்லாந்தில் நடந்தது. இதில், நடப்பு சம்பியன் வெர்ஸ்டபென் முதலிடம் பிடித்து சாதனை படைத்தார்.

இந்த ஆண்டுக்கான பார்முலா - வன் கார் பந்தயம் உலகம் முழுவதும் 22 சுற்றுகளாக நடத்தப்படுகிறது. இதன் 13ஆவது சுற்று பந்தயம் நெதர்லாந்தில் நடந்தது. இதன் பந்தய தூரம் 306.587 கிலோமீற்றர் ஆகும். இதில் வழக்கம் போல் 10 அணிகளை சேர்ந்த 20 வீரர்கள் காரில் சீறிப்பாய்ந்தனர்.

சிறிது நேரத்தில் மழை பெய்ததால் அந்த சவாலை சமாளிக்க வீரர்கள் பெரும் சிரமப்பட்டனர். இதனால் 45 நிமிடங்கள் பந்தயம் நிறுத்தப்பட்டு பிறகு தொடர்ந்து நடந்தது.

முதலிடம் பிடித்து முதல்வரிசையில் இருந்து புறப்பட்ட நடப்பு சம்பியனான நெதர்லாந்து வீரர் மேக்ஸ் வெர்ஸ்டப்பென் (ரெட்புல் அணி) 2 மணி 24 நிமிடம் 04. 411 வினாடிகளில் இலக்கை கடந்து முதலிடம் பிடித்தார்.

அவருக்கு 25 புள்ளிகள் கிடைத்தது. இந்த பருவ காலத்தில் அவர் தொடர்ச்சியாக பெற்ற 9ஆவது வெற்றி இதுவாகும்.

இதன் மூலம் 2013ஆம் ஆண்டில் தொடர்ந்து 9 பந்தயங்களில் வெற்றி கண்டிருந்த முன்னாள் சம்பியன் ஜேர்மனியின் செபாஸ்டியன் வெட்டலின் சாதனையை வெர்ஸ்டப்பென் சமன் செய்தார். அவரை விட 3.744 விநாடி மட்டுமே பின்தங்கிய ஸ்பெயினின் பெர்னாண்டோ அலோன்சா 2ஆவதாக வந்து 19 புள்ளிகளை பெற்றார். பியாரே கேஸ்லி (பிரான்ஸ்) 3ஆவது இடத்தை பெற்றார். 7 முறை சம்பியனான இங்கிலாந்து வீரர் லீவிஸ் ஹமில்டன் 6ஆவது இடத்துக்கு தள்ளப்பட்டார். (ஐ)

## சச்சினின் சாதனையை முறியடிக்கவுள்ள கோலி!

புதுடில்லி, ஒக. 29

ஆசியக் கிண்ணத் தொடர் நாளை ஆரம்பமாகவுள்ளது. இந்தத் தொடரில் 102 ஓட்டங்களை பெற்றால் சச்சின் டெண்டுல்கரின் சாதனையை விராட் கோலி முறியடிப்பார்.

இந்நிலையில் ஒருநாள் கிரிக்கெட்டில் இந்திய அணியின் நட்சத்திர வீரரான விராட் கோலி புதிய சாதனை ஒன்றைப் படைக்கவுள்ளார்.

ஆசிய கிண்ணத் தொடரில் விராட் கோலி மேலும் 102 ஓட்டங்களை அவர் பெறும்பட்சத்தில் ஒருநாள் கிரிக்கெட்டில் 13,000 ஓட்டங்களை கடந்த வீரர்களின் பட்டியலில் ஐந்தாவது வீரராக இணையவுள்ளார்.

இந்த பட்டியலில் சச்சின் டெண்டுல்கர், றிக்கி பொண்டிங், குமார் சங்ககாரா மற்றும் சனத் ஜெயசூர்யா ஆகியோருக்கு அடுத்து இவர் ஐந்தாவது இடத்தை பிடிக்கவுள்ளார்.

மேலும் சச்சின் டெண்டுல்கரின் சாதனை ஒன்றையும் கோலி முறியடிக்க உள்ளார். அதாவது சர்வதேச ஒரு நாள் போட்டிகளில் அதிவேகமாக 13,000 ஓட்டங்களை கடந்த வீரராக சச்சின் டெண்டுல்கர் உள்ளார். இவர், 321 இன்னிங்ஸ்களில் அந்த சாதனையை நிகழ்த்தினார். விராட் கோலி தற்போது வரை 265 இன்னிங்ஸ்களில் 12,898 ஓட்டங்கள் குவித்துள்ளார். இந்த சாதனையை அவர் வேகமாக முறியடிக்க வாய்ப்புள்ளது. (ஐ)







## தென்னாபிரிக்காவுடனான ரி-20 ஆஸியின் மக்ஸ்வெல் விலகல்!

சிட்னி, ஒக. 29

தென்னாபிரிக்காவுக்கு எதிரான இருபது - 20 தொடரில் இருந்து கிளென் மக்ஸவெல் விலகியுள்ளார்.

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி 3 இருபது - 20 மற்றும் 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்க தென்னாபிரிக்கா சென்றுள்ளது.

இந்தத் தொடரில் முதலில் இருபது - 20 போட்டிகள் நடைபெற உள்ளன. இரு அணிகளுக்கு இடையிலான முதலாவது இருபது -20 போட்டி வரும் 30ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இந்நிலையில் தென்னாபிரிக்காவுக்கு எதிரான தொடரில் அவுஸ்திரேலிய அணியில் இருபது -20 மற்றும் ஒருநாள் அணிகளில் இடம்பெற்றிருந்த அதிரடி ஆட்டக்காரரர் கிளென் மக்ஸ்வெல் காயம் காரணமாகவும், அவரின் மனைவி கர்ப்பமாக இருக்கிறார். அவருக்கு குழந்தை கிடைக்கவுள்ளதாலும் தொடரிலிருந்து விலகியுள்ளார்.

இதேசமயம், மக்ஸ்வெல்லுக்கு பதிலாக மத்தியூ வேட் சேர்க்கப்பட்டுள்ளார். (ஐ)

சமந்தா கிரான்வில்லே

# பிரிக்ஸ் விரிவாக்கம்: அமெரிக்க ஆதிக்கத்தை தகர்க்க இந்தியா, சீனா, ரஷ்யா வியூகமா?

ஐந்து நாடுகளைக் கொண்ட பிரிக்ஸ் அமைப்பின் உறுப்பினர்களின் எண்ணிக்கை இனி 11 ஆக இருக்கும். அர்ஜென்டினா, எகிப்து, ஈரான், எத்தியோப்பியா, சவூதி அரேபியா மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஆகிய நாடுகள் அடுத்த ஆண்டு ஜனவரியில் பிரிக்ஸ் உறுப்பினர் அந்தஸ்தை பெற உள்ளன.

இந்த விரிவாக்கம் ‘வரலாற்றுச் சிறப்புமிக்கது” என்று சீன அதிபர் ஷி ஜின்பிங் தெரிவித்துள்ளார். ஆனால், இந்த நாடுகளின் பொதுவான நலன்கள் எந்த அளவுக்கு விரிவடையும் என்பதுதான் கேள்வி.

“பிரிக்ஸ் விரிவாக்கம் உலகில் அமைதி மற்றும் வளர்ச்சியை மேலும் வலுப்படுத்தும்,” என்று ஷி ஜின்பிங் ஜோஹேனஸ்பர்க்கில் உலகத் தலைவர்களிடம் கூறினார்.

பிரேசில், ரஷ்யா, இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகள் இணைந்து பிரிக்ஸ் அமைப்பை உருவாக்கின. பின்னர் தென்னாப்பிரிக்கா அதில் சேர்க்கப்பட்டது.

இந்த நாடுகள் அனைத்தும் மேற்கத்திய நாடுகளின் தலைமையிலான உலக முறைமைக்கு ஒரு மாற்றாக கருதப்படுகின்றன. உலக அமைப்பில் அமெரிக்கா தலைமையிலான மேற்கத்திய நாடுகளின் மேலாதிக்கத்தை தகர்க்க சீனா தன்னால் முடிந்தவரை முயற்சி செய்து வருகிறது.

### அமெரிக்கா மற்றும் ஐரோப்பா

யதார்த்தத்தில் பிரிக்ஸ் நாடுகளுக்கு இடையே பெரிதாக எதுவும் பொதுவாக இருப்பதாக தென்படவில்லை என்று லண்டனை தளமாகக் கொண்ட எஸ்ஓஏஎஸ் சைனா இன்ஸ்டிட்யூட்டின் இயக்குனர் ஸ்டீவ் சாங் கூறுகிறார்.

ஆனால், எல்லா நாடுகளும் ஒரே போன்ற பொதுவான எதிர்காலத்தைத் தேடுகின்றன. மேற்கத்திய நாடுகள் ஆதிக்கம் செலுத்தும் உலகில் யாரும் வாழ விரும்பவில்லை என்று உறுப்பு நாடுகளுக்குக் காட்ட ஷி ஜின்பிங் முயற்சிக்கிறார்.

“சர்வாதிகார ஆட்சியாளர்கள் அந்தந்த நாடுகளில் பாதுகாப்பாக உணரும் ஒரு மாற்று உலகத்தை சீனா வழங்குகிறது,” என்கிறார் பேராசிரியர் சாங்.

“இந்த நாடுகள் ஜனநாயக நாடுகளான அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய சக்திகளின் நிபந்தனைகளை ஏற்காமல், வளர்ச்சிக்கான மாற்று திசையை கண்டுபிடிக்க முடியும்.” என்று அவர் குறிப்பிட்டார்.

### புதிய கூட்டுறவு

பிரிக்ஸ் அமைப்பில் புதிய நாடுகளை வரவேற்பதில் தென்னாப்பிரிக்க அதிபர் சிரில் ராமாபோஸாவின் மகிழ்ச்சி தெளிவாகத் தெரிந்தது.

“பிரிக்ஸ் அமைப்புடன் கூட்டுறவை உருவாக்கும் நாடுகளின் நலன்கள் முழுமையாக கவனித்துக்கொள்ளப்படும்,” என்று அவர் குறிப்பிட்டார்.

“எதிர்காலத்தில் மேலும் பல நாடுகள் பிரிக்ஸ் அமைப்பில் உறுப்பினர்களாக மாறும். முக்கிய உறுப்பு நாடுகள் இதற்கான அளவுகோல்களை முடிவு செய்யும். அதன் பிறகு புதிய உறுப்பினர்களுக்கு நுழைவு வழங்கப்படும்,” என்றார் அவர்.


ஆனால் இம்முறை எத்தனை நாடுகளை உறுப்பினர்களாக்க வேண்டும், இதற்கு எவ்வளவு நேரம் ஒதுக்க வேண்டும் என்பதில் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டன.

இதில் புதிதாக 5 உறுப்பினர்கள் சேர்க்கப்பட இருப்பதாக முன்பு தகவல் வெளியானது. இதன் பின்னர் பிரிக்ஸ் தலைவர்களின் செய்தியாளர் சந்திப்பு நடத்தப்பட இருந்தது. ஆனால் கடைசி நேரத்தில் அது ஒத்திவைக்கப்பட்டது.

### திடீர் முடிவு

பிரேசில் அதிபர் லூயிஸ் இனாஸ்யு லுலா டாசில்வா இரவு விருந்தில் கலந்து கொள்ளவில்லை. இதற்கான காரணம் தெரியவில்லை. ஆனால் மேற்கத்திய நாடுகளுடனான உறவுகள் குறித்து அவர் மிகவும் கவனமாக இருக்கிறார். இதனுடன் புதிய உறுப்பினர்களை தேர்வு செய்யும் விஷயத்திலும் அவருக்கு சொந்த விருப்பம் உள்ளது.




புதன்கிழமை அதிகாலையில் செய்தியாளர் சந்திப்பு நடக்க இருப்பதாக செய்தியாளர்களிடம் தெரிவிக்கப்பட்டது. ஆனால் இதுவும் இரண்டு மணி நேரத்திற்கு பிறகு தாமதமாக நடந்தது.

புதிய உறுப்பினர்களை சேர்ப்பது தொடர்பாக கடைசி நிமிடம் வரை பேச்சுவார்த்தை நடந்து வந்ததை இது உணர்த்தியது. அதன்பிறகு ஆறாவது நாட்டை உறுப்பினராக்கும் முடிவு திடீரென்று எடுக்கப்பட்டது.

### ரஷ்யாவின் நிலைப்பாடு

உக்ரேனில் நடந்ததாகக் கூறப்படும் போர்க்குற்றங்களுக்காக கைது செய்யப்படலாம் என்று அச்சம் காரணமாக ரஷ்ய அதிபர் விளாதிமிர் புடின் வீடியோ இணைப்பு மூலம் உச்சிமாநாட்டில் கலந்துகொண்டார்.



தனது உரையில் மேற்கத்திய நாடுகளை மீண்டும் குறிவைத்த அவர், அவர்களின் “புதிய தாராளமயம்” வளரும் நாடுகளின் பாரம்பரிய மதிப்புகளுக்கு அச்சுறுத்தலாக உள்ளது என்று கூறினார்.

“அதேநேரத்தில் எந்த நாடும் அல்லது பிராந்தியமும் ஆதிக்கத்திற்கு அடிபணியத் தேவையில்லாத இந்த “பல்முனை உலக முறைமைக்கும்”அவை ஒரு சவாலாக உள்ளன,”என்று புடின் குறிப்பிட்டார். அவர் அமெரிக்காவை குறிவைத்துப்பேசினார் என்று சொல்லத் தேவையே இல்லை. அமெரிக்கா அங்கு இல்லாத காரணத்தால் அந்த நாடு குறித்து பல சூழல்களில் விவாதிக்கப்பட்டது.

### அமெரிக்காவின் பதில்

இருப்பினும் அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜேக் சுல்லிவன், பிரிக்ஸ் விரிவாக்கத் திட்டத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கவில்லை. பல முக்கியமான விஷயங்களில் பிரிக்ஸ் நாடுகளின் கருத்துகள் வெவ்வேறானவை என்றார் அவர்.

“இந்த நாடுகளின் கருத்துவேறுபாடுகள் காரணமாக அமெரிக்காவிற்கு எதிராக எந்த ஒரு புவிசார் அரசியல் போட்டியாளரும் உருவாகும் வாய்ப்பு தென்படவில்லை,” என்று அவர் கூறினார், அது சரி என்று நிரூபணமும் ஆகக்கூடும்.

புதிதாக சேர்க்கப்பட உள்ள ஆறு உறுப்பினர்களில் யாருமே அமெரிக்காவுக்கு எதிரானவர்களாகத் தெரியவில்லை என்று வாஷிங்டனில் உள்ள குயின்ஸி இன்ஸ்டிட்யூட்டின் குளோபல் சவுத் திட்டத்தின் இயக்குனர் சாரங் ஷிடோரே தெரிவித்தார்.

“இவை வெவ்வேறுவிதமான நாடுகள் என்ற செய்தி மிகவும் தெளிவாக உள்ளது என்று நான் நினைக்கிறேன். அவை எதுவும் அமெரிக்காவின் நெருங்கிய கூட்டாளிகள் அல்ல. அதிகாரபூர்வ கூட்டணி பங்காளிகளும் அல்ல. இதில் இரண்டு அல்லது மூன்று நாடுகள் அமெரிக்காவை எதிர்க்கலாம். ஆனால் பரந்த அளவில் பார்த்தால், இது அமெரிக்க எதிர்ப்பு நாடுகளின் குழு அல்ல,” என்று அவர் பிபிசியிடம் கூறினார்,

அமெரிக்கா எல்லா விதிகளையும் உருவாக்க முடியாது. இத்தனை அம்சங்கள் இருக்கும் போதிலும் பிரிக்ஸ் விரிவாக்கம் என்பது மாற்றத்தின் அறிகுறியாகும்.

“எல்லா விதிகளையும் அமெரிக்காதான் முடிவு செய்யும், எல்லா அமைப்புகளிலும் அதுதான் தலைமை வகிக்கும் என்ற உலகம் இப்போது இல்லை. இதில் எந்த வித சந்தேகமும் இல்லை,” என்று ஷிடோரே கூறினார்.

### அமெரிக்காவின் இடத்திற்கு வேறு யாராவது வருவார்களா?

“உண்மை என்னவென்றால், புதிய உலக முறைமையில் ஒருவரை மாற்றுவதற்கு பதிலாக, அவருடன் இன்னொருவரை சேர்ப்பதற்கான தேடல்தான் நடக்கிறது,” என்று அவர் தெரிவித்தார்.

பிரிக்ஸ் நாடுகள் பரஸ்பரம் கருத்துகளை மதிப்பதாகக் கூறுகின்றன. உண்மையில் இது ஒரு வகையான தூதாண்மை அணிசேரல். இதில் ஏதோ ஒன்று கொடுக்கப்படுகிறது, ஏதோ ஒன்று பெறப்படுகிறது.




புடினை கைது செய்யும் நிலைமை வரவில்லை. இன்றைய நவீன தொழில்நுட்பம் காரணமாக அவரால் வீடியோ கான்பரன்சிங் மூலம் பிரிக்ஸ் மாநாட்டில் பங்கேற்க முடிந்தது.

இருப்பினும் பிரிக்ஸ் மாநாட்டின் போது உறுப்பினர்களின் விரிவாக்கத்தில் சீனா வெற்றி பெற்றது. பொதுவான நாணயம் ஒரு முக்கிய விஷயமாக விவாதிக்கப்பட வேண்டும் என்ற தீவிர முயற்சியை பிரேசில் மேற்கொண்டது.

இந்தியா, அமெரிக்காவுடனான தனது உறவை சமநிலைப்படுத்துவதைக் காண முடிந்தது. மாநாட்டை சிறப்பாக நடத்தியதில் தென்னாப்பிரிக்கா வெற்றி பெற்றது. ●

# சந்திரயான்-3:

## நிலவில் மோடி சூட்டிய 'சிவசக்தி': பெயர் நிலைக்குமா?

## சர்வதேச சமூகம் ஏற்குமா?

க.சுபகுணம்



சந்திரயான்-3 விண்கலம் ஒகஸ்ட் 23ஆம் திகதியன்று நிலாவில் வெற்றிகரமாக தரையிறங்கியது. அதற்கு வாழ்த்து தெரிவிக்கும் விதமாக ஒகஸ்ட் 26ஆம் தேதி இஸ்ரோ விஞ்ஞானிகளை பிரதமர் நரேந்திர மோடி நேரில் சந்தித்தார்.

அப்போது நிலாவில் சந்திரயான்-3 தரையிறங்கிய இடத்திற்கு பிரதமர் நரேந்திர மோடி 'சிவசக்தி' எனப் பெயரிட்டார். தற்போது இதுகுறித்து சர்ச்சை எழுந்துள்ளது.

பிரதமர் ஒரு குறிப்பிட்ட மத நம்பிக்கை சார்ந்த பெயரை வைத்தது கேள்விக்கு உள்ளாக்கப்படுவது ஒரு புறம் இருந்தாலும், இதுபோன்ற பெயரை சர்வதேச வானியல் கழகத்தின் விதிகள்படி வைக்கவே முடியாது என்றும் விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

இதுகுறித்துப் பேசிய பூனேவை சேர்ந்த விஞ்ஞானி ஒருவர், "சந்திரயான்-3 இன் வெற்றி ஒட்டுமொத்த மனித குலத்தின் வெற்றி என அறிவித்துவிட்டு, விக்ரம் லேண்டர் தரையிறங்கிய பகுதிக்கு தன்னிச்சையாக 'சிவசக்தி' என பிரதமர் பெயரிட்டிருப்பது துரதிர்ஷ்டவசமானது," என்று குறிப்பிடுகிறார்.

தனது பெயரை வெளிப்படுத்திக் கொள்ளாத அந்த விஞ்ஞானி, "இது குறித்துக் கேள்வியெழுப்பும் அறிவியலாளர்கள் இந்தியர்களுக்கும் இந்து மதத்திற்கும் விரோதமானவர்கள் எனப் போலியாகக் கட்டமைக்கப்படுவதாகவும்" வருத்தம் தெரிவித்தார்.

அதேவேளையில், கோள்களில் உள்ள பகுதிகளுக்கோ சிறுகோள்களுக்கோ இந்திய கலாசாரத்தின் அங்கமாக இருக்கும் இந்து கடவுள்களின் பெயர்களை வைப்பது இதுவே முதல்முறை என்றும் அல்ல. முன்பே லஷ்மி, ஹனுமான், கணேஷ் போன்ற பெயர்கள் சிறுகோள்களுக்கும் கோள்களின் பகுதிகளுக்கும் சூட்டப்பட்டுள்ளன.

ஆனால், இப்போது பிரதமர் சூட்டியுள்ள 'சிவசக்தி' என்னும் பெயர் சர்வதேச வானியல் கழகத்தின் விதிகளுக்கு உட்பட்டது இல்லை என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

இதேபோல் சந்திரயான்-1 தூக்கி வீசப்பட்டு, அது போய் விழுந்த நிலாவின் பகுதியை ஜவஹர் புள்ளி எனப் பெயரிட வேண்டும் என்று அப்துல் கலாம் பரிந்துரைத்தார்.

அதை ஏற்றுக்கொண்டபோது இப்போது சிவசக்தி என்ற பெயருக்கு மட்டும் ஏன் கேள்வியெழுப்பப்படுகிறது என்று இந்தப் பெயரை ஆதரிக்கும் தரப்பால் கேட்கப்படுகிறது.

ஆனால், "ஜவஹர் புள்ளி என்பதும் நிலாவில் உள்ள பகுதிகளுக்குப் பெயர் வைப்பதற்கான சர்வதேச விதிமுறைகளின்படி இல்லை என்பதால், அதுவும் சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளப்படவில்லை," என்று புனேவை சேர்ந்த பெயர் வெளியிட விரும்பாத விஞ்ஞானி தெரிவித்தார்.

### வான் பொருட்களுக்குப் பெயர் வைக்க இருக்கும் விதிகள் என்ன?

பிரதமர் சூட்டிய பெயர் அங்கீகரிக்கப்படுமா இல்லையா என்பதைப் பார்ப்பதற்கு முன்பாக, கோள்களுக்கும் அவற்றில் உள்ள பகுதிகளுக்கும் பெயர் வைக்க சர்வதேச வானியல் கழகம் விதிமுறைகளை வகுத்துள்ளது.

முன்பு ஐரோப்பிய வானியலாளர்கள் வைத்ததே பெயர் என்ற நிலைமை இருந்தது. ஆனால், 1919ஆம் ஆண்டு சர்வதேச வானியல் கழகம் உருவாக்கப்பட்ட பிறகு அந்த நிலை மாறியது. உலகின் பல்வேறு பண்பாடுகளையும் மதிக்கும் வகையில் வான் பொருள்களுக்குப் பெயர் சூட்ட வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது.

இந்த சர்வதேச வானியல் கழகத்தின் தொடக்க கால உறுப்பினர்களில் இந்தியாவும் ஒன்று. இந்தியா 1964ஆம் ஆண்டு அதில் இணைந்தது.



இந்தக் கழகம் வரையறுத்துள்ள விதிகளின்படி, வியாழன் கோளுக்கு அருகே சூரியனை சுற்றி வரும் குறுங்கோள்களுக்கு புராண இதிகாசங்களில் உள்ள பெயர்களை, கண்டுபிடிப்பாளர் பெயர்களை, புகழ் பெற்ற சிந்தனையாளர்களின் பெயர்களை வைக்கலாம்.

ஆனால், நூறு ஆண்டுகளுக்கும் குறைவான வரலாறு கொண்ட தனிநபர்கள் அல்லது நிகழ்வுகளின் பெயர்கள், வணிகப் பெயர்கள், செல்லப் பிராணிகளின் பெயர்களை வைக்க அனுமதிக்கப்படாது.

அத்தகைய விதிமுறைகளின் அடிப்படையில் இந்திய புராணப் பெயர்கள் குறுங்கோள்களுக்கு சூட்டப்பட்டுள்ளன. அவை,

1951ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்ட குறுங்கோளின் பெயர் ஹனுமன்

1957ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்ட குறுங்கோளின் பெயர் கருடா

1978ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்ட குறுங்கோளின் பெயர் கணேசா

இவற்றைப் போலவே, 1993ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்ட ஒரு குறுங்கோளுக்கு பாண்டிச்சேரி என்று கூடப் பெயர் வைக்கப்பட்டுள்ளது. அதேபோல ராமானுஜம் என்ற பெயரும் வைக்கப்பட்டுள்ளது.

இப்படியாக எந்தெந்த வான் பொருட்களுக்கு என்ன மாதிரியான பெயர்களை வைக்கலாம் என்று வரையறுத்து சர்வதேச வானியல் கழகம் விதிமுறைகளை வகுத்துள்ளது.

### பெண் பெயர்களை மட்டுமே கொண்ட வெள்ளி கோள்

அந்த சர்வதேச வானியல் கழக விதிகளின்படி, வெள்ளி கோளில் தரைப்பரப்பில் பெண் தெய்வங்கள் மற்றும் பெண் ஆய்வாளர்களின் பெயர்களை மட்டுமே சூட்ட வேண்டும்.



அதன் அடிப்படையில், வெள்ளி கோளில் உள்ள நேபாள பீடபூமியை போலத் தோற்றமளிக்கும் ஒரு பீடபூமிக்கு இந்து மத கடவுளாக அறியப்படும் லக்ஷ்மியின் பெயர் வைக்கப்பட்டுள்ளது.

சமீபத்தில் புனேவில் உள்ள ஓர் ஆய்வு நிறுவனம் கேலக்ஸி பெரும்கொத்து ஒன்றைக் கண்டுபிடித்தது. சர்வதேச விதிமுறைகளுக்கு உட்பட்டு அதற்கு சரஸ்வதி என்று பெயரிட்டுள்ளார்கள். ஏனென்றால், பெரும் நதிகளின் பெயர்களை கேலக்சி பெரும்கொத்துகளுக்கு வைக்க வேண்டும் என்பது விதி.

ஆகவே, இந்து கடவுள்களின் பெயர்களோ இந்தியாவுடன் தொடர்புடைய பெயர்களோ வான்பொருட்களுக்கு வைக்கப்படுவது முற்றிலுமாக எதிர்க்கப்படும் ஒரு விஷயமல்ல என்பது புரிகிறது.

ஆனால், "விதிமுறைகளுக்கு உட்பட்டு வைக்கப்படும் பெயர்களும், தன்னிச்சையாக, சார்புடன் வைக்கப்படும் பெயர் ஒன்று ஆகாது," என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

### நிலாவில் பெயர் வைப்பதற்கான விதிமுறைகள் என்ன?

வெள்ளி கோள், கேலக்ஸி பெரும்கொத்துகள் போலவே நிலாவில் பெயர் வைக்க வேண்டுமென்றால் அதற்கும் சில விதிமுறைகளும் வரையறைகளும் உள்ளன. அவை,

மறைந்து மூன்று ஆண்டுகளுக்கு மேலான பிரபல விஞ்ஞானிகள், வானியல், கோளியல், விண்வெளி அறிவியல் ஆகியவற்றுடன் தொடர்புடைய, அந்தத் துறையில் கணிசமான பங்களிப்பு செய்த விஞ்ஞானிகள், பொறியாளர்கள், கண்டுபிடிப்பாளர்களின் பெயர்களை வைக்கலாம். இறந்த விண்வெளி வீரர்களின் பெயர்களை வைக்கலாம். வானிலை அல்லது மனநிலை சார்ந்த பெயர்களை வைக்கலாம். சான்றாக, "அமெரிக்காவின் அப்பல்லோ 11 தரையிறங்கத் தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதி 'அமைதிக் கடல்' என்றும் தரையிறங்கிய புள்ளியை 'அமைதித் தளம்' என்றும் அழைக்கப்படுகிறது.

அதேபோல, விண்கற்கள் மோதி ஏற்படும் கிரேட்டர் எனப்படும் பெரும்பள்ளங்களுக்கு ஆரியபட்டா, ஹோமி பாபா, சி.வி.ராமன் ஆகியோரின் பெயர்கள் வைக்கப்பட்டுள்ளன. கல்பனா சாவ்லாவின் நினைவாகவும் ஒரு பெரும் பள்ளத்திற்கு சாவ்லா எனப் பெயரிப்பட்டுள்ளது," எனக் கூறுகிறார் புனேவை சேர்ந்த விஞ்ஞானி.

### சிவசக்தி - 'நாட்டு மக்கள் அனைவருக்குமான பெயராக இல்லை'

"நிலாவில் உள்ள பகுதிகளுக்குப் பெயர் வைக்க நடைமுறை உள்ளதா இல்லையா என்பது இரண்டாம் பட்சம். ஒருவேளை இருக்கிறது என்றே வைத்துக் கொண்டாலும் இப்போது வைத்துள்ள பெயர் அனைத்து நாட்டு மக்களின் உணர்வுகளையும் பிரதிபலிக்கும் வகையில் இல்லை," என்கிறார் ப்ரேக்த்ரூ சயின்ஸ் சொசைட்டியை சேர்ந்த அறிவியலாளர் வெங்கடேசன்.

இதுபோன்ற வான்பொருட்களுக்குப் பெயரிடும் போது இந்திய பண்பாட்டின் பழங்கால வானியல் அறிஞர்களே மற்ற அனைத்து கலாசாரங்களுக்கும் பொதுவாக இருந்த பெயர்களையே சூட்டினர் என்று கூறுகிறார் வெங்கடேசன்.

மேலும், கோள்களின், வான் பொருட்களின் தன்மையை அடிப்படையாக வைத்தே ஆரியபட்டா போன்ற வானியல் அறிஞர்கள் பெயர் சூட்டினார்கள் என்று தெரிவிக்கிறார் வெங்கடேசன்.

சந்திரயான்-3 வெற்றியைப் பாராட்டும் வகையிலான பேரணியில் பங்கேற்றபோது பேசிய அவர், "சிவசக்தி என்ற பெயர் நாட்டு மக்கள் அனைவரின் உணர்வுகளையும் பிரதிபலிக்கவில்லை," என்று கூறினார்.

அதோடு, "இப்போது வைத்துள்ள பெயர் முற்றிலும் மதம் சார்ந்ததாகவே இருக்கிறது. இது அனைவருக்கும் பொதுவானதாக இல்லை," என்றும் அவர் குறிப்பிடுகிறார்.

"சந்திரயான்-3இன் வெற்றியை சாதி, மத பேதமின்றி நாட்டு மக்கள் அனைவரும் கொண்டாடினார்கள். ஆனால், அனைத்து மக்களுடைய உணர்வுகளையும் பிரதிபலிக்கும் வகையிலான 'இந்திய பெயரை' பிரதமர் வைக்கவில்லை," என்று கூறுகிறார் அறிவியலாளர் வெங்கடேசன்.

### பிரதமர் வைத்த 'சிவசக்தி' என்ற பெயர் நிராகரிக்கப்படுமா?

இதன்மூலம் வான் பொருட்களுக்குப் பெயரிடுவதில் லத்தீன், கிரேக்க புராணப் பெயர்கள் மட்டுமின்றி இந்தியப் பண்பாடும் இந்தியர்களின் பெயர்களும் பயன்படுத்தப்படுகின்றன என்பது புரிகிறது.

ஆனால், "சிவசக்தி என்ற பெயர் நிலாவில் பெயர் வைப்பதற்கான சர்வதேச விதிகளுக்கும் வரையறைகளுக்கும் முற்றிலும் விரோதமானது," என்று பெயர் தெரிவிக்க விரும்பாத மற்றொரு விஞ்ஞானி குறிப்பிடுகிறார்.

வேறு கோள்களில் அந்தப் பெயர்களை வைக்க அதன் விதிகள் அனுமதிக்கின்றன. நாம் மேலே பார்த்தது போல் இந்திய பண்பாட்டைக் குறிக்கும் அத்தகைய பெயர்களும் வைக்கப்பட்டுள்ளன.

இதுவே, குறுங்கோள் ஒன்றுக்கு சிவசக்தி எனப் பெயரிட்டிருந்தால் அது அங்கீகரிக்கப்பட்டிருக்கும். ஆனால், நிலாவில் இத்தகைய பெயரை வைப்பது சர்வதேச வானியல் கழகத்தின் விதிகளுக்குப் புறம்பானது.

சர்வதேச வானியல் கழகத்தின் விதிப்படி நிலாவில் இதிகாசம், புராணம், நம்பிக்கை ஆகியவற்றின் பெயர்களை நிலாவில் வைக்கக்கூடாது. ஆகவே, "பிரதமர் வைத்த அந்தப் பெயர் விதிமுறைகளை மீறியது என்பதால், அந்தப் பெயர் நிராகரிக்கப்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளதாக" விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

அதுமட்டுமின்றி, "தற்போது இந்தியா தரையிறங்கியுள்ள பகுதிக்கு சந்திரயான் போன்ற ஆய்வுகளை இஸ்ரோ மேற்கொள்ளத் தூண்டுதலாக இருந்த அப்துல் கலாம் அல்லது இஸ்ரோ வளர்ச்சியடையக் காரணமான சதீஷ் தவான், யு.ஆர்.ராவ் போன்றோரின் பெயர்கள் வைக்கப்படுவதே மிகப் பொருத்தமாக இருக்கும்," எனக் கூறும் அறிவியலாளர் வெங்கடேசன் இந்தப் பெயர் மறுபரிசீலனைக்கு எடுக்கப்பட வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கிறார்.

(பிபிசி)

# ஐஸ் வியாபாரிகள் இரண்டு பேர் கைது

மட்டக்களப்பு, ஓக. 29

மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் பிரிவிலுள்ள பாலமீன் மடு பிரதேசத்தில் ஐஸ் போதைப் பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வியாபாரிகள் இருவரை பொலிஸார் நேற்று முன் தினம் ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் சுற்றிவளைத்து மடக்கி பிடித்தனர்.

இருவரை கைது செய்தபோதும் அதில் ஒருவர் ஐஸ் போதைப் பொருளை வாயில் போட்டு விழுங்கியதையடுத்து அவரை வைத்தியசாலையில் அனுமதித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவல் ஒன்றினையடுத்து சம்பவதினமான ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் பாலமீன்மடு பிரதேசத்தில் வீதியில் பொலிஸார் கண்காணிப்பில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

இதன்போது வியாபாரத்துக்காக ஐஸ் போதைப்பொருளை எடுத்து வந்த 31 வயது, 19 வயதுடைய இருவரை பொலிஸார் மடக்கிப் பிடித்து கைது செய்தனர். 10 மில்லி கிராம், 15 மில்லிக்கிராம் போதைப்பொருளையும் கைப்பற்றினர்.

பொலிஸாரைக் கண்ட 19 வயதுடைய இளைஞன், ஐஸ் போதைப்பொருளை வாயில் போட்டு விழுங்கியுள்ளார். இதனையடுத்து அவரை நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்திய பொலிஸார் அவரை வைத்திய சாலையில் அனுமதித்துள்ளனர்.

இதில் கைது செய்யப்பட்ட மற்றையவரிடம் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டதன் பின்னர் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# பற்றாக்குறையான மருந்துகள் 2 வாரங்களுக்குள் இறக்குமதி

கொழும்பு, ஓக. 29

பற்றாக்குறையாக உள்ள மேலும் 50 வகையான மருந்துகள் அடுத்த இரண்டு வாரங்களுக்குள் இறக்குமதி செய்யப்படும் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

50 வகையான மருந்துகள் அடுத்த இரண்டு வாரங்களுக்குள் இறக்குமதி செய்யப்படும்.

இதன்படி மருந்து தட்டுப்பாடு ஓரளவு கட்டுப்படுத்தப்படும். தற்போது மருத்துவ விநியோகத் துறையில் 230 மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது. அந்த மருந்துகள் அனைத்தும் உடனடியாக முன்பதிவு செய்யப்பட்டு இறக்குமதி செய்யப்படும் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்தியாவசிய மருந்துகளின் இறக்குமதி இந்தியாவின் கடனுதவியின் கீழ் பெற்றுக்கொள்ளப்படும் என சுகாதார அமைச்சு மேலும் குறிப்பிட்டுள்ளது. (அ)

# சட்டவிரோத மீன்பிடி 15 பேர் கைதாகினர்!

கொழும்பு, ஓக. 29

வடக்கு - கிழக்கு அண்மித்த கடலோர பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்புகளின் போது சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட 15 பேர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடல் மார்க்கமாக மேற்கொள்ளப்படும் சட்டவிரோத செயல்பாடுகளை தடுக்கும் வகையில் கடற்படையினரால் விசேட ரோந்து நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இதற்கமைவாக கடந்த 25 ஆம் திகதி மற்றும் 26 ஆம் திகதி திருகோணமலை, லங்காபட்டினம், குச்சவெளி மற்றும் யாழ்ப்பாணத்தை அண்மித்த கடல் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட விசேட ரோந்து நடவடிக்கையின் போது தடை செய்யப்பட்ட மீன்பிடி வலைகள் மற்றும் மின் உபகரணங்களை பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்டிருந்த 15 பேர் கைது செய்யப்பட்டனர். இதன் போது 6 டிங்கி படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர்கள் 17 முதல் 38 வயதுக்கு இடைப்பட்டவர்கள் எனவும் அவர்கள் திருகோணமலை, ஈச்சலம்பற்று, குச்சவெளி மற்றும் புதுக்குடியிருப்பு பிரதேசங்களை சேர்ந்தவர்கள் எனவும் கடற்படை தெரிவித்துள்ளது.

சந்தேக நபர்களை மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக திருகோணமலை, யாழ்ப்பாணம் நீரியல் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்கள். (ஐ)

# அஸ்வெசும கொடுப்பனவு வழங்குவதற்கு ரூ. 5 பில்லியனை விடுவித்தது திறைசேரி

கொழும்பு, ஓக. 29

அஸ்வெசும நலன்புரி கொடுப்பனவுகளை பயனாளிகளுக்கு வழங்குவதற்காக திறைசேரி அரச வங்கிகளுக்கு 5 பில்லியனை விடுவித்துள்ளது.

மாதாந்த நலன்புரி கொடுப்பனவுகளை வழங்கத் தொடங்கியுள்ள நிலையில் வங்கிகளுக்கு நிதி விடுவிக்கப்பட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை, நிதி வழங்கல் தொடர்பான பிரச்சினைகளையும் தீர்ப்பதற்காக அமைச்சின் அதிகாரிகளுக்கும் வங்கி அதிகாரிகளுக்கும் இடையில் விசேட சந்திப்பொன்று இன்று நடைபெறவுள்ளது. (அ)

# திருமண நிகழ்வில் பங்கேற்ற பெண் திடீரென வீழ்ந்து மரணம்!

கொழும்பு, ஓக. 29

ஹொரணையில் திருமண நிகழ்வொன்றில் பங்கேற்றிருந்த 25 வயது பெண் ஒருவர் திடீரென சுகவீனமடைந்து உயிரிழந்தார்.

உயிரிழந்தவர் ஹொரணையில் உள்ள தனியார் நிறுவனமொன்றின் ஊழியர் எனவும் மீகொடை பிரதேசத்தை வசிப்பிடமாகக் கொண்டவர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

ஹொரணை, கோனாபொல பிரதேசத்தில் உள்ள ஹோட்டல் ஒன்றில் பணிபுரியும் சக ஊழியர் ஒருவரின் திருமண நிகழ்வில் கலந்து கொண்ட போது குறித்த பெண் திடீரென சுகவீனமடைந்துள்ளார்.

அவர் உடனடியாக ஹொரண மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். எனினும் அங்கு அவர் உயிரிழந்தார்.

பிரேத பரிசோதனையில் உணவு சுவாசக் குழாயில் சிக்கியதால் ஏற்பட்ட மாரடைப்பால் மரணம் நிகழ்ந்தாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

